பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 26 | ஞாயிற்றுக்கிழமை 10.03.2019 | கதிர் 126

## இனி இது ரகசியம் அல்ல!

ஜெனீவா விவகாரத்தை முன் நிறுத்தித் தமிழ்க் கூட்டமைப்பின் தலைமைக்கு மாறாக சில காய் நகர்த்தல்களை முன்னெடுக்கும் ரெலோவின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா, தவிசாளர் சிவாஜி லிங்கம் ஆகியோரின் முயற்சி திருவினையாக்குமா பக்கம் 02 »

# வடக்கு ஆளுநர் ஜனாதிபதியின் முகவர் தமிழருக்காக அவர் ஜெனீவா செல்வதா?



## மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடும் என எச்சரிக்கிறார் சுமந்திரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடக்கு மாகாண ஆளுநர் ஜெனீவாவுக்குச் செல்வது தொடர்பில் தமிழ் மக்கள் விசனம் கொள்ளத் தேவையில்லை. ஜனாதிபதியின் முகவரான ஆளுநர் என்ன செய்வார் என்பது எமக்குத் தெரியும் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 15 »

## ஐ.நா. மேற்பார்வையுடன் இலங்கைக்கு இறுக்கமான காலவரையறை வேண்டும்

சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கிறது என அதன் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். பக்கம் 15 »

## ஆங்கிலமொழி சரியாக கற்பிக்கப்படுவதில்லை

சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 10

சர்வதேச மொழியான ஆங்கிலம் பல பாடசாலைகளில் முறையாக கற்பிக்கப்படுவதில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பக்கம் 15 »

## நிரந்தர அரசியல் தீர்வுதான் தமிழருக்கு முதல் முக்கியம்

ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 10

தமிழ் மக்களுக்கு முதலில் அரசியல் தீர்வே முக்கியமான தேவைப்பபாடாக உள்ளதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு பக்கம் 15 »

## வெகுவிரைவில் ஆட்சி மாற்றம்!

கூறுகின்றார் மஹிந்த



கொழும்பு, மார்ச் 10

வெகுவிரைவில் அரசியல் மாற்றம் ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தலதா மாளிகையில் நேற்று வழிபாட்டில் ஈடுபட்ட பக்கம் 15 »

## மஹிந்தவை நோர்வே புறக்கணிக்கின்றாதா?

கொழும்பு, மார்ச் 10

நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க செயலர் மரியன் ஹகென் இறுக்கமான நிகழ்ச்சி நிரல் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவில்லை என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பக்கம் 15 »

## பெரமுனவுடன் முரண்பாடு ஒப்புக்கொண்டார் எஸ்.பி.!

கொழும்பு, மார்ச் 10

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு காரணமாகவே கண்டியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பக்கம் 15 »

## கொழும்புச் சூடுகளின் பின்னணியில் புலிகளா?

தலையைப் பிய்க்கிறது பொலிஸ்

கொழும்பு, மார்ச் 10

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் சிலர், தென்னிலங்கை பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பைப் பேணி, தாக்குதல் நடவடிக்கை பக்கம் 15 »

## கொடிகாமம் விபத்தில் படுகாயமுற்றவர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த இருவரில் இளைஞன் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று யாழ். போதனா வைத்தியசாலை பக்கம் 15 »

## பிராந்திய அலுவலகங்களை அமைப்பதில் காணாமல்போனோர் பணியகம் தீவிரம்!

மார்ச் 30 மன்னாரில் வடக்குக்கான முதல் அலுவலகம் திறப்பு

கொழும்பு, மார்ச் 10

காணாமல்போனோர் தொடர்பான பணியகத்தின் வடக்குக்கான முதலாவது 'பிராந்திய அலுவலகம்' மார்ச் 30ஆம் திகதி மன்னாரில் திறக்கப்படவுள்ளது என்று பணியகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி பக்கம் 15 »

## திருமலையில் கிளர்ந்தெழுந்தனர் காணாமற்போனோரின் உறவுகள்



திருமலை, மார்ச் 10

திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்டுவரும் காணாமலாக்கப்பட்டோரின் உறவு பக்கம் 15 »

## ஜெனீவாவில் முன்வைக்கவுள்ள கோரிக்கைகளை ஆளுநரிடம் கையளித்த அனந்தி, சிவாஜிலிங்கம்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்குமாறு கோரி மனு ஒன்றை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளித்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது பக்கம் 02 »



விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir






# வடக்கின் போர் சமநிலையானது

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணம்மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வடக்கின் போர் 113ஆவது கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிந்தது.

யாழ்ப்பாணம்மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வடக்கின் போர் எனவர்ணிக்கப்படும் நூற்றாண்டு காலகிரிக்கெட்போட்டியாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்தவியாழக்கிழமைஆரம்பித்தது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி,சென்.ஜோன்ஸ்கல்லூரியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. முதலில்துடுப்பெடுத்தாடியசென். ஜோன்ஸ்கல்லூரி181ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. டினோசன் 98 ஓட்டங்களைப் பெற்றார். அபினாஸ் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இயலரசன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிற மத்தியகல்லூரிஅணி195ஓட்டங்களைப் பெற்றது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 14 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 121 ஓட்டங்களை எடுத்த நிலையில் நேற்று இரண்டாம்நாள் முடிந்தது.

மூன்றாவதும் இறுதியுமான நேற்றைய ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்களை இழந்து 245 ஓட்டங்களைப்பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. ஆரம்ப இணையான தனுயன் 66 ஓட்டங்களையும், சௌமியன் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

மத்திய கல்லூரி அணியில் பந்து வீசிய வி.விஜய்ஸ்காந்த் 38 ஓவர்களில் 88 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். செ.மதுசன் 22 ஓவர்களில் 51 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 232 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கியது. ஆரம்ப இணை இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்கள் வரை நிலைத்தது. எனினும் அதன் பின்னர் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில்சரிந்தன. இதனால் மத்திய கல்லூரி அணியின் ஓட்டக்குவிப்பு கட்டுப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை மத்திய கல்லூரி அணி பெற்றிருந்த நிலையில் ஆட்டம் வெற்றிதோல்வி இன்றி முடிந்தது. மத்திய வரிசையில் மதுசன் 65 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்துவீச்சில் அபினாஸ் 11 ஓவர்களை வீசி 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது பெரும்பாலும் இன்று ஓரளவுக்குத் தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சில சமயங்களில் இன்றைய தினத்துடன் ரெலோவின் ஒருசாரர் முன்னெடுக்கும் முயற்சி முற்றாகத் தடைப்பட்டுப் போனாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

ஜெனீவாவில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கும் திட்டத்தில் கூட்டமைப்பின் தலைமை – குறிப்பாக சம்பந்தனும் சுமந்திரனும் –

இருப்பது போன்ற நிலைப்பாட்டைக் காட்டி, அதற்கு மாறாக, கால அவகாசம் வழங்கக்கூடாது என்றுவற்புறுத்தும்கடிதம்ஒன்றை அனைத்துத் தமிழர் தரப்புகளிடமும் ஒப்பம் பெற்று ஜெனீவாவுக்கு அனுப்ப வேண்டும் என்பது ஸ்ரீகாந்தா – சிவாஜி இணையின் திட்டம். அதற்கான நகல் கடிதமும் அவர்களிடம் 'ரெடி'.

ஆனால் இக்கடிதத்துக்கு முதலில் ரெலோ எம்.பிக்கள் செல்வம், கோடீஸ்வரன் ஆகியோரின் ஒப்பத்தைப்பெற்றுக்கொண்டு வாருங்கள், பிறகு எங்கள் கையெழுத்தை பெறலாம் என ஸ்ரீகாந்தா – சிவாஜி இணையிடம் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் முகத்தில் அடித்தால் போல கூறிவிட்டன.

ஆனால், வழங்கப்படுவது இலங்கைக்கான கால அவகாசம் அல்ல, இலங்கை மீதான சர்வதேசக் கண்காணிப்பு நீடிப்பே, அதைக் கைவிடவே முடியாது என்பதை கடந்த வாரம் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் சுமந்திரனும், சம்பந்தனும் தெளிவாக விளங்கப்படுத்தி விட்டனர். செல்வம் உட்பட்ட ரெலோவினரும் அதை ஏற்றுக் கொண்டு இணங்கி வந்து விட்டனர். இது தொடர்பில் கூட்டமைப்பு ஜெனீவாவுக்கு அனுப்பும் கடிதத்தின் பிரதியும் செல்வம் தரப்பிடம் கையளிக்கப்பட்டுவிட்டது.

சம்பந்தன்–சுமந்திரன் இணை சமர்ப்பித்துள்ள கடித நகலை ஏற்றுக் கொண்டு கையெழுத்திடுவதா அல்லது அதற்குத்தலைகீழாக ஸ்ரீகாந்தா – சிவாஜி இணை தயாரித்துள்ள கடிதத்தை அங்கீகரிப்பதா என்பதை முடிவுசெய்வதற்காக ரெலோவின் உயர் அரசியல் பீடம் இன்று காலை வவுனியாவில் கூடுகின்றது.

அரசியல் பீடத்தில் ஒன்பது உறுப்பினர்கள்.

சிவாஜி, ஸ்ரீகாந்தா, விநோதராதலிங்கம் ஆகிய மூவரும் இந்த விடயத்தில் ஒரு பக்கமும் –

ஏனையோரான செல்வம், விந்தன், ஜனா கருணாகரம், ஹென்றி மகேந்திரன், இந்திரகுமார் பிரசன்னா, குருசாமி சுரேன் ஆகிய அறுவரும் மற்றைய பக்கமும் – என்று கூறப்படுகின்றது.

எது, எப்படியொன்றாலும், சில மாதங்களுக்கு முன்னர் கூடிய ரெலோவின் பொதுக்குழு ஜெனீவாவில் இலங்கைக்கு மேலும் கால நீடிப்பு வழங்கப்படக்கூடாது என்ற வகையில் தீர்மானம் எடுத்திருப்பதால், அதன்படியே செயற்பட வேண்டும் என்றும்–

பொதுக்குழுவின் முடிவைமீறி அரசியல்குழு தீர்மானம் எதையும் எடுக்க முடியாது என்றும் –

ஒரு வாதத்தைத் தனது தரப்புக்கு ஆதரவாக முன்வைக்கும் பலத்துடன்தான் ஸ்ரீகாந்தா தரப்பு இன்று வவுனியாக் கூட்டத்துக்குப் போகின்றது.

இந்த ஜெனீவாப் பிரச்சினையை முன்வைத்து ரெலோவுக்குள் பிளவு வந்தாலும் கூட ஆச்சரியப்பட முடியாது என்று ரெலோவுடன் தொடர்புடைய சில வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே 2010 காலப் பகுதியில் ஸ்ரீகாந்தா – சிவாஜி அணி ரெலோவைப் பிளந்து தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் சில காலம் தனித்துச்செயற்பட்டமை மறக்க–மறுக்க – முடியாதது.

சரித்திரம் திரும்புவது என்பது இதைத்தானோ...?

ஆங்கிலத்தில் இதற்கு ஒரு கூற்று உண்டு. 'History repeats itself ' என்பார்கள்.

அந்த வழக்காறு மொழியை தத்துவாசிரியர் கார்ல் மார்க்ஸ் மேலும் ஒரு விதத்தில் செழுமைப்படுத்திக் கூறியுள்ளார்.

'History repeats itself, First as tragedy; Second as farce' என்றார் அவர். அதன் அர்த்தம் 'சரித்திரம் தன்பாட்டில் மீள நிகழும். முதலில் துன்பியல் நிகழ்வாக. இரண்டாவது தடவை கேலிக்கூத்தாக.'

ரெலோவில் எப்படி ஆகப் போகின்றது? பொறுத்திருந்து பார்ப்போம்.

- மின்னல்-

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தொடர் ஜெனீவாவில் கடந்த மாதம் ஆரம்பமாகியுள்ளது.

மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வில் இலங்கை அரசின் சார்பில் கலந்து கொள்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உட்பட மூவர் அடங்கிய குழுவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோர் ஜெனீவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத் தொடரில் வடக்கு மாகாணம் சார்ந்து முன்வைக்க வேண்டியதெனக் கருதும் தமது கோரிக்கைகளை ஆளுநருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதம் மேற்குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது கோரிக்கைகளை ஆளுநர் செயலகத்தில் சமர்ப்பிக்க முடியும்.

இதேவேளை, பொதுமக்கள் தமது கோரிக்கைகளை எதிர்வரும் 13ஆம் திகதி கைதடி முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெறும் மக்கள் சந்திப்பில் இதற்கென விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் கையளிக்க முடியும்.

இதனையடுத்தே, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் உள்ளிட்டோர் ஜெனீவாவில் சமர்ப்பிக்க வேண்டியதெனக் கருதும் தமது கோரிக்கைகளை நேற்று முற்பகல் ஆளுநர் அலுவலகத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

ஆளுநரின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் இந்தக் கோரிக்கை கடிதத்தை ஆளுநர் சார்பாகப் பெற்றுக் கொண்டனர். (ஐ–07)


### காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் முன்பாக பருத்தித்துறை வீதியில் 3 1/4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

நல்லூர் கோயில் வீதியில் 5 பரப்பு காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

நல்லூர் மருதடி வீதியில் 1 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. ஒரு கோடி 35 லட்சம்
Jaffna Real Estate

யாழ்ப்பாண நகர் BMC வீதியில் 2 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு. பரப்பு ஒன்றின் விலை 90 லட்சம்.
Jaffna Real Estate

யாழ்ப்பாண நகர் BMC வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
Jaffna Real Estate

பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு. (பரப்பு ஒன்றின் விலை 1.25 கோடி)
Jaffna Real Estate

யாழ். சென்ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு. (பரப்பு ஒன்றின் விலை 45 லட்சம்)
Jaffna Real Estate

சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வில் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

யாழ். புகையிரத நிலையத்துக்கு அண்மையாக அம்பலவாணர் வீதியில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. பரப்பு ஒன்றின் விலை 65 லட்சம்.
Jaffna Real Estate

### காணி விற்பனைக்கு



வசாவிளானில் தோட்டக்காணி 60 பரப்பு (பலாலி வீதிக்கு அண்மையாக) உடன் விற்பனைக்கு. பரப்பு 5 லட்சம்.
Jaffna Real Estate

தட்டாதெரு சந்திக்கு அண்மையாக 1 3/4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பரப்பு 40 லட்சம்.
Jaffna Real Estate

திருநெல்வேலி பிள்ளையார் வீதியில் 4 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பரப்பு 40 லட்சம்.
Jaffna Real Estate

நீர்வேலி கரந்தனில் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

கல்வியன்காடு ஜி.பி.எஸ். வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
Jaffna Real Estate

உரும்பிராய் பலாலி வீதிக்கு அண்மையாக 4 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

ஊரெழு திலீபன் வீதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு. 48 லட்சம்.
Jaffna Real Estate

புன்னாலைக்கட்டுவன் சுன்னாகம் வீதியில் 26 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயக் கல்லூரிக்கு முன்பாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு.
Jaffna Real Estate

மானிப்பாயில் 3 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
Jaffna Real Estate



பொற்பதி வீதியில் 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு. பரப்பு ஒன்றின் விலை 45 லட்சம்.
Jaffna Real Estate

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கோவில் வீதியில் வீடு விற்பனைக்கு. 4 கோடி 50 லட்சம்.
Jaffna Real Estate

யாழ்ப்பாண நகர் B.M.C. வீதியில் வீடு விற்பனைக்கு. 2 கோடி 25 லட்சம்.
Jaffna Real Estate

சுண்டுக்குளி பாண்டியன்தாழ்வில் வீடு உடன் விற்பனைக்கு. 75 லட்சம்.
Jaffna Real Estate

திருநெல்வேலியில் வீடு விற்பனைக்கு. மொத்த விலை 1கோடி 35 லட்சம்.
Jaffna Real Estate

நீர்வேலி கரந்தன் பகுதியில் வீடு விற்பனைக்கு. மொத்த விலை ஒரு கோடி.
Jaffna Real Estate

### வீடு விற்பனைக்கு



கல்வியன்காடு G.P.S.வீதியில் வீடு உடன் விற்பனைக்குண்டு. 1 கோடி 15 லட்சம்.
Jaffna Real Estate

உரும்பிராய் (பலாலி வீதிக்கு அண்மையாக) வீடு விற்பனைக்குண்டு. மொத்த விலை 1 கோடி 20 லட்சம்.
Jaffna Real Estate

புன்னாலைக் கட்டுவன் (சுன்னாகம் வீதியில்) பழைய நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு. 90 லட்சம்.
Jaffna Real Estate

திருநெல்வேலி (விவசாயக் கல்லூரிக்கு முன்பாக) புதிய மாடி வீடு உடன் விற்பனைக்கு. 1 கோடி 75 லட்சம்.
Jaffna Real Estate

JAFFNA REAL ESTATE
வீடுகள், காணிகள், வர்த்தக நிலையங்கள், பண்ணைகள், விவசாய நிலங்கள் இன்னும் ஏராளமான விற்பனைக்குரிய ஆதனங்கள் எம்மிடம் உண்டு.
தொடர்புகளுக்கு : 0761214255
Jaffna Real Estate
www.jaffnarealestate.com
34/2 Sir Pon Ramanathan Rd,
Thirunelveli, Jaffna.

### சேவை

Welding/ அனைத்து விதமான வெல்டிங் வேலைகள் குறுகிய காலத்தில் செய்திட
தொடர்புக்கு: 07694959 17

### சேவை

CCTV/ அனைத்து விதமான கண்காணிப்புக் கமராக்களைப் பெற்றிட VIP CCTV
தொடர்புக்கு: 0773767899

### அச்சுப் பதித்தல் | அச்சுப் பதித்தல்

Navalar Printers
அனைத்துவிதமான 'பிறிண்டிங் மற்றும் பைண்டிங்' வேலைகளுக்கு
நாவலர் பிறிண்டேர்ஸ்
பருத்தித்துறை வீதி, 5 ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொலைபேசி: 021 223 1644 / 0777746855
மின்னஞ்சல்: navalar1023@gmail.com


### பயணம் | பயணம்

CreativeTravels.ca
வெளிநாடுகளுக்கான பயணச் சீட்டுக்களைச் சிறந்த விலையில் துரிதமாகப் பெற்றுக்கொள்ள. தொடர்புகளுக்கு
தொலைபேசி: 0767088647
மின்னஞ்சல்: creativetravels.asia@gmail.com

150 ரூபாயிலிருந்து
உங்கள் விளம்பரங்களை இங்கே பிரசுரிக்க
அழையுங்கள்
021 222 3000
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# தமிழரின் ஆதரவின்றி தேர்தலில் வெல்வேன்!

## கோட்டாபய இறுமாப்பு



கொழும்பு, மார்ச் 10

சிறுபான்மையினரின் - குறிப்பாக தமிழர்களின் ஆதரவு இன்றி, சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தம்மால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறவேண்டும் என்பது அவசியமில்லை.

2010 இல் மஹிந்த ராஜபக்ஷ , தமிழர்களின் ஆதரவு இல்லாமல், 18 லட்சம் வாக்குகளால் வெற்றி பெற்றார். 2015இல் அவர் தோல்வியடைந்தமைக்கு, தமிழ், முஸ்லிம்களின் ஆதரவு கிடைக்காதமை அல்ல.

கொழும்பு,கம்பஹா போன்ற மாவட்டங்களில் உள்ள நகரப் பகுதிகளில் உள்ள நடுத்தர மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. 449,000 வாக்குகளால் மாத்திரமே அவர் தோல்வியடைந்தார்.

அந்தச் சாதகமற்ற சூழ்நிலையில் கூட மஹிந்தராஜபக்ஷவுக்கு, வடக்கில் 1 இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்களின் வாக்குகள் கிடைத்தன.

போரின்போது, யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவ முகாம்களால் நிரம்பியிருந்தது. போர் முடிந்ததும், கீரிமலை, வசாவிளான், தொண்டைமானாறு போன்ற பகுதிகளில் உள்ள நிலங்களை விடுவித்தோம். பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தை மாத்திரம் வைத்திருந்தோம்.

இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட தனியார் காணிகளில் 90 வீதமானவற்றை நான் விடுவித்தேன். பாதுகாப்புக் காரணங்களுக்காக பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தை மாத்திரம் வைத்திருந்தோம்.

எமக்குத் தேவைப்பட்ட தனியார் காணிகளைக் கொள்வனவு செய்தோம். கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு 3 இலட்சம் மக்கள் மீளக் குடியேற்றப்பட்டனர்.

தற்போதுள்ள கிளிநொச்சி நவீன மருத்துவமனை முன்னர் இராணுவ முகாமாக இருந்தது. இவையெல்லாம், 2010இற்கும் 2014இற்கும் இடைப்பட்ட குறுகிய காலத்துக்குள் நடந்தன – என்றார்.(ஐ)

# மைத்திரி - மஹிந்த கூட்டணிக்குள் வெடித்தது மோதல்!

## கண்டிப் பேரணியைப் புறக்கணித்தது சு.க.



கொழும்பு, மார்ச் 10

அரசுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கண்டியில் நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் நடத்தப்பட்ட பேரணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரோ பங்கேற்கவில்லை.

முன்னதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்தே இந்தப் பேரணியை நடத்தவுள்ளது எனத்தகவல்கள் வெளியாகியிருந்தன.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ முதல் முறையாக இந்தப் பேரணியில் அரசியல் மேடையில் ஏறவுள்ளார் எனவும் கூறப்பட்டது.

எனினும், தமக்கு அழைப்பு வரவில்லை என்றும், தாம் இந்தப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என்றும் கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் நடத்தப்பட்ட கூட்டணிப் பேச்சுக்கள் இன்னமும் இறுதி செய்யப்படாத நிலையில் இந்தப் பேரணியை சுதந்திரக் கட்சி தவிர்த்துக் கொண்டுள்ளது.

தமது கட்சியைச் சேர்ந்த எவரையும் இந்தப் பேரணியில் பங்கேற்கக் கூடாது என்று சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடுத்துள்ளார்.

இதனால் நேற்று முன் தினம் நடந்த பேரணியில் பொது எதிரணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமே பங்கேற்றிருந்தனர்.(ஐ)

# காயங்களுடன் குடும்பஸ்தர் சடலம் மீட்பு!

வவுனியா, மார்ச் 10

வவுனியா, உக்கிளாங்குளம், 4ஆம் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் நெற்றி மற்றும் கை என்பவற்றில் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் சம்பவ நேரம் தந்தையும் மகளும் இருந்துள்ளார்கள். மகள் உணவருந்திவிட்டு உறங்கியுள்ளார். தந்தையாரும் உணவருந்திவிட்டு வீட்டில் இருந்துள்ளார்.

நித்திரை விட்டு எழுந்த மகள் தந்தையைத் தேடியபோது வீட்டின் முன் வாயில் பகுதியில் உள்ள தண்ணீர்ப் பம்பி அருகில் தந்தையார் விழுந்து கிடந்ததை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் மற்றும் உறவினர்களின் உதவியுடன் தந்தையை எழுப்ப முயன்றபோது அவரது நெற்றி மற்றும் கை என்பவற்றில் காயங்கள் காணப்பட்டமையும், மரணமடைந்திருந்தமையும் தெரிய வந்தது.

இதனையடுத்து பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பண்டாரிக்குளம் பொலிஸார் இந்தக் குடும்பஸ்தரின் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தில் காயங்கள் காணப்பட்டமையால் உடனடியாக வவுனியா தடயவியல் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.



இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த தடயவியல் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரணமடைந்தவர் அப்பகுதியைச் சேர்ந்த செ.சிவராஜா (வயது 64) என்பவராவார். சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ஐ)

# ராணுவத்தினருக்கு அதிக நிதி தமிழர்களுக்கு ஒன்றுமில்லை

## டக்ளஸ் எம்.பி. விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நல்லாட்சி அரசு என்று கூறிய ஆட்சியாளர்களும், இந்த அரசை தாமே ஆட்சிக்குக் கொண்டுவந்தவர்கள் என்றும், தாமே தற்போதும் ஆட்சியை முண்டு கொடுத்து பாதுகாத்துக் கொண்டிருக்கின்றோம் என்றும், தமது ஆலோசனைகளின் அடிப்படையிலேயே அமைச்சரவைத் தீர்மானங்களும், வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளும் தீர்மானிக்கப்படுகின்றன எனக்கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் 2019 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் படையினருக்கும், அவர்களின் சேம நலன்களுக்குமே பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், சமூகத்தில் பல துயரங்களைச் சுமந்து வாழும் அனைத்து முன்னாள் தமிழ் போராளிகளுக்கும் இந்த வரவு – செலவுத்திட்டத்தில் எவ்விதமான உதவிகளும் முன்மொழியப்படவில்லை.

படையினரின் நலன்களுக்கும் அவர்களின் குழந்தைகளின் எதிர்காலம் என்றெல்லாம் சிந்தித்த அரசும், அதற்கு முண்டு கொடுப்பவர்களும் யுத்தப் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வடக்கு, கிழக்கில் வாழும் அங்கவீனமானவர்களையும், அநாதரவானவர்களையும், கைம்பெண்களையும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களைத் தோற்கடிக்கப்பட்டவர்களாகவும், இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் நடத்தும் அரசுகளால் எவ்வாறு இனங்களுக்கிடையே உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்?

அரசின் வெற்றுக்கோஷமான தேசிய நல்லிணக்கத்தை ஏற்றுக்கொள்ளவோ, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்து சுயலாப அரசியல் நடத்திக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மன்னிப்பதற்கோ தமிழ் மக்கள் இனியும் தயாராக இல்லை–என்றார். (ஐ)

# தமிழ் மக்கள் கூட்டணியின் பணிமனை கிளிநொச்சியில்

## திறப்பு விழா நிகழ்வு இன்று

கிளிநொச்சி, மார்ச் 10

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மக்கள் பணிமனை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல 258, துர்க்கை அம்மன் வீதி, ஆனந்தபுரம் என்ற முகவரியில் திறந்து வைக்கப்படுகிறது.

கட்சியின் செயலாளர் நாயகமும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் இந்த பணிமனையைத் திறந்து வைப்பார்.

கட்சியின் பல முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றடுக்கும் வகையில் எமது அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசாரச் செயற்பாடுகளில் இணைந்து செயற்படவருமாறு தமிழ் மக்கள் கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கே இனிப் பாடசாலைகளில் நியமனம்



பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

எதிர்காலத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே நியமிக்கப்படுவர் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய போதனாபீட டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் நவீன கல்வித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் – அதிகாரிகள் தேவைப்படுகின்றனர். ஒரு இலட்சம் என்ற இலக்கில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வருட இறுதிக்குள் 90 ஆயிரம் பேராக அதிகரித்து அடுத்த வருடத்தில் இலக்கை எட்டிப்பிடிப்போம். நாம் எமது நாட்டில் குறுகி வாழமுடியாது உலகை எட்டிப் பிடிக்க வேண்டும். அதனை அடைவதற்கு நவீன கல்வி முறைகளைக் கிராமிய மட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

தற்போது நாட்டில் உள்ள பாடசாலைகளில் 80 ஆயிரம் டிப்ளோமா பட்டதாரிகள் கல்வி கற்பித்து வருகின்றனர். பயிற்சி பெறாத அனைத்து ஆசிரியர்களுக்கும் டிப்ளோமாப் பயிற்சியை பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் கல்வியமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் பாடசாலைகளில் பயிற்சி பெறாத ஆசிரியர்களே அதிகமாகக் காணப்பட்டனர். எந்தப் பாடசாலையை எடுத்துக்கொண்டாலும் பயிற்சி பெற்றவர்கள் ஒருவர் அல்லது இருவரே காணப்பட்டனர். அன்று நான் ஓர் உறுதிப்பாட்டை எடுத்தேன். கல்வித் துறையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை உருவாக்க வேண்டுமென்பதே அந்த எண்ணமாகும்.

எனது அந்தக் கனவை நனவாக்க முப்பது வருடங்கள் பிடித்துள்ளது. 15 வருடங்களுக்குள் இதனைச் செய்ய திட்டமிட்டிருந்தேன். ஆனால், அரசியல் மாற்றங்களால் அது சாத்தியப்படாமல் போனது. எதிர்காலத்தில் அரசாங்கம் பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமிக்கும் எண்ணம் கிடையாது. கல்வி டிப்ளோமாப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்த பின்னரே நியமனங்கள் வழங்கப்படும் – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## கொதிநிலையில் வைத்திருப்போம்

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தாத இலங்கைக்கு எதிராகக் கடும்பிடி பிடிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்செலட் அம்மையார் கூறியிருக்கின்றார்.

இலங்கை விவகாரம் தொடர்பான அவரது உத்தியோகபூர்வ அறிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதியே ஜெனீவாவில் தற்போது நடைபெறும் கவுன்ஸிலின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. எனினும் பொது ஆய்வுக்காக நேற்று முன்தினம் வெளியான அதன் பிரதியிலேயே ஆணையாளரின் இந்த நிலைப்பாடு பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

தனக்கு எதிரான சர்வதேச நெருக்கடி கழுத்தை நெருக்கும் அளவுக்கு வந்தபோது அதைச் சமாளிப்பதற்காக 2015 செப்ரெம்பரில் இலங்கை தானும் சேர்ந்து தன் நாடு தொடர்பில் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்ற வைத்தது.

யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து சர்வதேச தரத்துக்கு அமைவாக நீதி விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, நிலையான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்று இந்தத் தீர்மானம் வலியுறுத்தி நின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை முன்னெடுத்த நடவடிக்கைகளைக் கண்காணித்துப் பரிசீலித்து ஆய்வு செய்வதற்கான காலமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்படி ஒன்றரை ஆண்டுகள் கழித்து, 2017 மார்ச்சில் இலங்கையில் இடம்பெற்ற விடயங்கள், முன்னைய தீர்மானத்தின் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்த ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கையில் முன்னைய தீர்மானங்கள் தொடர்பிலான முன்னேற்றங்களில் அதிருப்தி அடைந்தமையுடன் அதன் காரணமாக இலங்கை மீதான கவுன்ஸிலின் கண்காணிப்பை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கவும், அந்த இரண்டு வருடங்களின் முடிவில் இலங்கை நிலைமை குறித்து ஆராயவும் தீர்மானித்தது. இவ்வாறு கவுன்ஸிலின் கண்காணிப்பை இப்படி மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும் தீர்மானத்தை இலங்கை தானும் சேர்ந்து கவுன்ஸிலில் முன்மொழிந்து கொண்டுவந்தது.

இப்போது அந்த இரண்டாவது கால அவகாசமும் முடிவடைந்த பின்னரும் ஏதேனும் உருப்படியாகச் செய்யாத - நடைமுறைப்படுத்தாத - இலங்கை, மெல்ல அந்தத் தீர்மானத்தில் இருந்து முழுமையாக நழுவப்பார்க்கின்றது.

அதன் மூலம், யுத்த காலத்தில் தனது படைகள் இழைத்த யுத் தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை ஒரேயடியாக மூடி மறைத்து, நீதியை நிலை நாட்டமறுத்து, யுத்தக் குற்றங்கள் மற்றும் கொடூரங்களை இழைத்தோரைக் காப்பாற்றி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டாமல் புறந்தள்ளி, தன் அராஜகப் போக்கைத் தொடர்வதில் தீர்க்கமாக - தீர்மானமாக - இருக்கின்றது கொழும்பு.

அத்தகைய கொழும்பின் போக்குக்கு எதிராகக் கடும்பிடி பிடிக்கக் கோருகின்றார் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர்.

அந்தக் கடும்பிடி எத்தகையதாக - என்ன போக்கில் - அமைய வேண்டும் என்பதே இப்போதுள்ள கேள்வி.

எங்களில் பலரும் கூறுகின்றமை போல, இவ்விடயத்தில் நீதி செய்யவும், பொறுப்புக் கூறலை நிலை நாட்டவும் இலங்கைக்கு அளித்த கால அவகாசம் நீண்டு விட்டதால் இந்த விடயத்தை இனி நேரடியாக ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக் கையளிப்பதா? அப்படி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தானே இந்த விடயத்தை நேரடியாக பாதுகாப்புக் கவுன்ஸிலுக்குப் பரிந்துரை செய்ய வாய்ப்புள்ளதா? கவுன்ஸில் அதைச் செய்யுமா? - என்றெல்லாம் கேள்வி எழுகின்றது.

இந்த விடயத்தை பாதுகாப்புக் கவுன்ஸிலுக்குக் கொண்டு போக முடியுமோ, இல்லையோ, முதலில் இவ்விடயத்தை - யுத்த காலத்தில் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட மனிதப் பேரவலக் கொடூரம் என்ற பேரழிவு விவகாரத்தை - சர்வதேசத்தின் மனதிலிருந்து அகன்று விடாதபடி கொதி நிலைச் சிந்தனையில் தொடர்ந்து வைத்திருப்பது மிக மிக அவசியம். அதைச் செய்வதற்கு, ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற சர்வதேச அரங்குகளில் இந்த விடயத்தை மீளவும் மீளவும் எதிரொலித்துக் கொண்டிருக்கச் செய்வதும், இலங்கை தனது படைகள் மூலம் தான் இழைத்த பெருங் கொடூரத்துக்கு எந்தக் காலத்திலும் தானே முன்னின்று நீதியும், பிராயச்சித்தமும் செய்யாது என்பதை சர்வதேசத்திற்குத் திரும்பவும் திரும்பவும் நினைப்பூட்டிக் கொண்டிருப்பதும் மிக மிக முக்கியமாகும்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற சர்வதேச அரங்குகள் இந்த விவகாரத்தைக் கொதி நிலையில் வைத்திருப்பதற்கு மிகவும் வாய்ப்பானவையாகவும் பொருத்தமானவையாகவும் இருக்கின்றமையை நாம் மறந்து விடக் கூடாது.

ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்தில் இலங்கையில் இவ்விடயத்தை ஒட்டிய முன்னேற்றங்களை ஆய்வு செய்யவும், மேலும் ஒரு வருட காலத்தில் அது குறித்த அறிக்கைகளை விலாவாரிய விவாதித்து மீளவும் வலியுறுத்தல்களை உறுதிப்படுத்தவும் இதுவே இன்றைய நிலையில் கனகச்சிதமான சர்வதேச அரங்கமாகும்.

இலங்கையில் தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதி தேடி பாதுகாப்புச் சபையிடமும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடமும் செல்கின்றோமோ இல்லையோ, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு வழங்கப்படுவது கால அவகாசமா அல்லது சர்வதேச கண்காணிப்பு நீடிப்பா, எப்படியாயினும் இருந்துவிட்டுப் போகட்டும்.

ஆனால், இவ்விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொதி நிலையில் வைத்திருப்பதை மட்டும் நாம் தொடரவேவேண்டும். அதுதான் தமிழருக்கு சாதகமானது.

# கல்முனைப் பிரதேச செயலக விவகாரம்: சபையில் கோடீஸ்வரன் - ஹரீஸ் மோதல்

கொழும்பு, மார்ச் 10

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத்தரமுயர்த்துவதற்குப் பிரதமர் உறுதியளித்துள்ள நிலையில், அதனைத் தடுக்க நாடாளுமன்றஉறுப்பினர்ஹரீஸ் முயற்சி செய்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் குற்றஞ் சாட்டினார்.

வரவு - செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ் குறுக்கீடு செய்ததால் இருவருக்கும் இடையில் கடுமையான வாதம் ஏற்பட்டது. இதனைப் பிரதிச் சபாநாயகர் தலையீடு செய்து தடுத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கோடீஸ்வரன் எம்.பி -

கல்முனை வடக்கு பிரதேச சபையைதரமுயர்த்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதாக பிரதமர் வாக்குறுதி அளித்துள்ளார். ஆனால், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கூடாது என ஹரிஸ் எம்.பி கூறியுள்ளார். இதனால், தமிழ் மக்கள் வேதனை அடைந்துள்ளனர்.

தமிழ் மக்கள் நிர்வாக ரீதியான அலகை பெறவிரும்புகிறார்கள். 29 தமிழ் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி இந்தப் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு முதல் இந்த பிரதேச செயலகம் செயற்படுகிறது. உப பிரதேச செயலகமாக இருக்கும் இதற்கு தேவையான ஆளணி வழங்கப்பட்டுள்ளதோடு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டமும் நடைபெறுகிறது. தனியாக உள்ளக இடமாற்ற அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதனை தரமுயர்த்துவதற்கு இவர் எதிர்ப்பு தெரிவிக்கிறார் - என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு சகல அதிகாரங்களும் காணப்படுவதை அவர் ஏற்கிறார். நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்காக அன்றிக் காணி தொடர்பான பிரச்சினையே இங்கிருக்கிறது. இங்கு இரு சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் - என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய கோடீஸ்வரன் எம்.பி, தமது வங்குரோத்து அரசியலுக்காகவே இவர் கல்முனை வடக்கு பிரசேத செயலகத்துக்குத் தடையாக இருக்கிறார். இதற்கு யார் இவருக்கு அதிகாரம் வழங்கினார்கள். சாய்ந்தமருது பிரதேச செயலகத்தைப் பிரிக்கக்கூடாது என அரசியல் நெருக்கடி சமயத்தில் இவர் பிரதமரிடம் கோரியிருந்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வேண்டும். கல்முனை நகரில் 90 வீதம் தமிழ் மக்களே வாழ்கிறார்கள். ஆனால், இவர் வங்குரோத்து அரசியல் செய்கிறார். தேசிய நல்லிணக்கத்திற்கு எதிராகச் செயற்படுவதைக் கண்டிக்கிறேன் - என்றார். (ஐ)

### தென்மராட்சியில் இரு கல்லூரிகளில்

# சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் அமைத்த கட்டடங்கள் திறப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 10

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பயணிகள் தரிப்பிடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகியன நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டன.

முதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில், அமைக்கப்பட்ட பயணிகள் தரிப்பிடம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.


பாடசாலை அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் க.நடராசா ஆகியோர் கலந்து கொண்டு தரிப்பிடத்தைத் திறந்து வைத்தனர்.

இதன்போது கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவருமான க.நடர்ாசா எழுதிய நூல் ஒன்றின் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது.

இதன் பின்னர் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையும் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரோடு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தனும் விருந்தினராகக் கலந்துகொண்டு சிற்றுண்டிச்சாலையை திறந்து வைத்தனர். (ஐ-07)

## விபுலானந்தக் கல்லூரியில் தீ!





வவுனியா, மார்ச் 10

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரியில் நேற்று மதியம் 12.30 மணியளவில் ஏற்பட்ட தீப் பரவல் சுமார் ஒரு மணிநேர போராட்டத்தின் பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விபுலானந்தக் கல்லூரியின் கணினி அறை திடீரென தீ பற்றி எரிந்துள்ளது. இதனையடுத்து பாடசாலைச் சமூகத்தினர் பண்டாரிக்குளம் பொலிஸார் மற்றும் வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பண்டாரிக்குளம் பொலிஸார் பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றி னார்கள்.

அதன் பின் வவுனியா நகரசபை தீயணைப்புப் பிரிவினர் சுமார் ஒரு மணிநேரப் போராட்டத்தினால் தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கணினி அறையில் ஏற்பட்ட மின்னொழுக்கினால் தீவிபத்து நேர்ந்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் கூறினர்.

தீவிபத்துகாரணமாககணினி அறையில் இருந்த கணினிகள், கதிரைகள் என்பன முற்றாக எரிந்து சாம்பராகின. (ஐ-100)

## மாதகல் பாணாகவெட்டி அம்பாளுக்கு இன்று கொடியேற்றம்

மாதகல், மார்ச் 10

மாதகல், பாணாகவெட்டி அருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவ்தான மஹாற்சவ பெருவிழா இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்ககிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

### நாளை

10.03.2019
திட்கட்கிழமை

நட்சத்திரம்: பரணி, சித்தம் பி.இ. 1.56 வரை.
திதி : பஞ்சமி பி.இ. 02.16 வரை.
சுபநேரம் :12.23 – 01.53 வரை
இராகுகாலம் : 07.53 – 09.23 வரை

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்தவேண்டும்!

## மட்டக்களப்பு மாநகரசபையில் தீர்மானம்

மட்டக்களப்பு, மார்ச் 10

இலங்கை அரசைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லக் கோரும் தீர்மாணம் மட்டக்களப்பு மாநகர சபையில் 29 வாக்குகளால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற மட்டக்களப்பு மாநகரசபையின் 16ஆவது பொது அமர்வின்போது இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு வருவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலைக் கோருதலும், ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தலும் என்ற தனிநபர் பிரேரணை மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலனால் கொண்டு வரப்பட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது போர்க்குற்றங்களும், மனித நேயக் குற்றங்களும்இடம்பெற்றுள்ளனஎன ஐக்கியநாடுகள்சபையின்முன்னைய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அந்த அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை அரசைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கும், தமிழ் மக்களுக்கான தீர்வை இதுவரை வழங்கத் தவறியுள்ளமையாலும், கடந்த கால வன்முறைகள் மீளெழுவதைத் தடுப்பதன் பொருட்டு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளமையாலும் ஒரு நிலையான அரசியல் தீர்வைக் காண்பதை நோக்காகக் கொண்டும், தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்மானிப்பதன் பொருட்டும் இத்தீவின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கும், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளை கோருவதாக இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போதுஇந்தப்பிரேரணையை நிறைவேற்றும் வகையில் மாநகர சபை முதல்வரினால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. வாக்கெடுப்பின் போதுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 17, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் 05, தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் 04, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர், சுயேச்சைக் குழுக்களின்உறுப்பினர்கள் இருவர் ஆதரவாக வாக்களித்தனர்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 03, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 04, சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் இதன்போது நடுநிலைமை வகித்தனர்.

இதனைத் தொடர்ந்து எவ்வித எதிர்ப்பும் இன்றி 29 வாக்குகளால் இந்த பிரேரணை மாநகர சபையில் நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஆராயப்படவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாநகர சபையில் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# அதிபர்கள், ஆசிரியர்கள் புதனன்று கறுப்புப் பட்டியுடன் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் எதிர்வரும் புதன்கிழமை அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கவனவீர்ப்புப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இதற்கான அழைப்பை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரனும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினும் கூட்டிணைந்து விடுத்துள்ளனர்.

அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அழைப்பில்,

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் புதனன்று சுகவீன லீவுப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால்களும், கடையடைப்புக்களும் காலத்தின் தேவை கருதி நடைபெறுகின்றன. அவற்றுக்குத் தீர்வு கிடைக்கவேண்டும் என எமது ஆதங்கங்களையும், அநீதிகளையும் உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றோம்.

அதன் ஒரு செயற்பாடாக கடந்த 25ஆம் திகதி அன்று நடைபெற்ற வடக்கு மாகாணம் தழுவிய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தில் நாம் முழுமையாக பங்குகொண்டோம். அவ்வாறே அடக்குமுறைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிரான போராட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவையும் வழங்கி வருகின்றோம்.

அதேபோன்று குறைந்த வேதனங்களோடு பணியாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் தமது வேதனங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், அவசியமற்றசுமைகள்நீக்கப்படவேண்டும் எனவும், மத்திய அரசு கல்விக்காக ஒதுக்கும் நிதி போதுமானதாக இல்லை எனவும் பல போராட்டங்களை முன்னெடுத்தும் எந்தப் பயனும் இல்லை.

எதிர்வரும் புதன் கிழமை ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளத்தை உயர்த்துதல், ஆசிரியர்கள் மீது செலுத்தப்படும் தேவையற்ற நெருக்கீடுகளை அகற்றுதல், மொத்த தேசிய உற்பத்தியில்கல்விக்காக6வீதம்ஒதுக்குதல் ஆகியமூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை மாணவர்களும், பெற்றோரும் புரிந்து கொள்ளும் விதத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்றுகாலை 08.00 மணிமுதல் காலை 08.30 மணிவரை கைகளில் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலை நுழைவாயில் அமைதியாக ஒன்றுகூடி தமது கவனவீர்ப்பை வெளிப்படுத்தி, அன்றைய நாள் முழுவதும் கறுப்புப் பட்டியுடன் கடமையில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது – என்று உள்ளது. (ஐ)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 10

உயர் அழுத்த மற்றும்தாழ்அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில் -**

பெரிய கரைசல் ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## இன்று சில இடங்களில் மின் தடை இல்லை

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் படி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் பிரதேசத்தில் – துணைவி, சங்கானை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, விளிசிட்டி, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை மாரீசன் கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம் ஜம்புகோலப்பட்டிணம், குசுமாந்துறை காட்டுபுலம், வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், சண்டிலிப்பாய், சீரணி, மாசியப்பிட்டி, பேருமாள் கடவை, ஆலங் குலாய், சண்டிலிப்பாய், கந்தாரோடை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகத்தடை மேற்கொள்ளப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# கொக்குவில் ச.ச. நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு

கொக்குவில், மார்ச் 10

கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் நிலைய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக இ.செல்வராஜா செயலாளராக மு.ஈழத்தமிழ் மணி, பொருளாளராக சி.ஜெயக்குமார் , உப தலைவராக த.இ. விஜயேந்திரன், உபசெயலாளராக இ.அழகராஜா தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி. ச. பேரானந்தன், பிரிந்தா ரதீஸ்வரன், ந.சிவானாந்தராஜா, ச.லோகேந்திரன், சி.மகேந்திரன், ரீ.புலந்திரன் ஆகியோர் தெரிவாகினர்.

சனசமூக நிலையப் பொலுப்பாளராக ஆ.க. வைரமுத்து, நூலகப் பொறுப்பாளராக திருமதி ப.பாலசுந்தரம், கலை பண்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக திருமதி மாலினி விஜயேந்திரன், விளையாட்டுத் துறைப் பொறுப்பாளராக க.பேரானந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

கணக்காய்வாளர்களாக வி.சுந்தரலிங்கம், என்.சுபாரட்ணம் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். (இ




# பொன்னாக புடமிட...!

சோதனை மனித வாழ்வில் எதிர்கொள்ளும் போது மனித மனம் தனம் மாறி, தடுமாறி, எத்தனை தடவை பாவச் செயல்களில் வீழ்ந்து கலங்கி இருப்பொம இவை மனித பலவீனமாக கொண்டாலும் எம்மை வழிகாட்டும் இறை மகனும் பாலைவனத்தில் அனுபவித்தார். அவர் நாற்பது நாள்கள் அலடைகயினால் சோதிக்கப்பட்டார்? அந் நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன்பின் அவர் பசியுற்றார். அப்பொழுதும் சாத்தான் அவரை சோதித்தது. 'மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை' என்று கூறி அவரது திடமான இலக்கு நோக்கிய பயணத்தை தொடர்ந்து பல சோதனைகளை வென்றார் என எமக்கு முன்மாதிரியாக வாழ்வை வழிகாட்டினார். அவரது பக்தர்களாகிய நாம் சிறு சலனங்கள், சபலங்களால் தடுமாறும் போது எம் மனதை திடப்படுத்த இத் தவக்காலத்தை பயனுள்ளதாக்க அழைக்கப்படுகின்றோம்.

எமது வாழ்வை பொன்னுக்கு ஒப்பிடுவோம், மண்ணுக்குள சேற்றுக்குள் இருந்து எடுத்த கட்டி ஒன்றே பலமுறை தீயினால் புடமிடப்பட்டு தங்கமாக ஜொலிக்கிறது. தங்கமாக மிளிர தீயினால் சுடப்பட்ட போது விலகிய கழிவுகளால் தானே அதன் சிறப்பு பொன்னாகிறது. எமது வாழ்வை புடமிட கிடைத்த காலமே இத் தவக்காலம் என ஏற்று எம்மில் உள்ள கழிவான செயல்களை அகற்றி புதிய பிறப்பாக பிறருக்கு பணி செய்து அன்பை பகிர்ந்து இறை அன்பான பொன்னாக முன்மாதிரியான வாழ்வுக்கு எம்மை புடமிடுவோமா. இதனை எமது வாழ்வில் மாற்றங்கண்டு மகிழ அழைப்பை அர்த்தமுள்ளதாக்குவோமா?

செ.யோசப்பாலா

VIP CCTV



077-3767899

30%

விலைக்கழிவு

இந்திய விமானங்கள் குண்டுவீசிய இடம் குறித்து பாகிஸ்தான் ஊடகங்கள் வெளியிட்ட புகைப்படம்

# இந்திய விமானப்படை குண்டுவீச்சில் 19 பைன் மரங்கள் மட்டுமே அழிந்தன

## பாகிஸ்தான் தரப்பில் தகவல்



பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் தமது விமானங்கள் தீவிரவாதிகளின் முகாம்களைக் குண்டு வீசித் தகர்த்தன என்று இந்தியா அறிவிக்க –

மறுபுறத்தில் 19 மரங்களை குண்டு வீசி அழித்ததாக இந்திய விமானப்படையின் அடையாளம் தெரியாத விமானிகள் மீது முதல் தகவல் அறிக்கையைப் பாகிஸ்தான் வனத்துறை பதிவு செய்துள்ளது.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடியாக பாலகோட் பகுதியில் தீவிரவாத முகாம்களை இந்திய விமானப்படை குண்டு வீசி அழித்துவிட்டதாக இந்திய மத்திய அரசு கூறி வரும் நிலையில், அதை மறுக்கும் வகையில் மரங்களைத்தான் குண்டு வீசி அழித்துவிட்டதாகக் குறிப்பிட்டு பாகிஸ்தான் இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளது.

அந்த முதல் தகவல் அறிக்கையில், இந்திய விமானப்படையின் விமானங்கள் குண்டு வீசியதில் 19 பைன் மரங்கள் அழிக்கப்பட்டன எனவும், குண்டுவீசிச் சென்ற விமானிகள் யார் என்பது குறித்து அடையாளம் காணப்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி புல்வாமாவில் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 துணை இராணுவப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்குப் பதிலடியாக கடந்த மாதம் 26 ஆம் திகதி, பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் செயல்பட்டு வரும் ஜெய்ஷ் இ முகமது முகாம்கள் மீது இந்திய விமானப்படையினர் குண்டு வீசி அழித்தனர், இதில் 350 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என மத்திய அரசு தெரிவிக்கிறது.

ஆனால், இந்திய விமானப்படையினர் குண்டு வீசியது உண்மைதான், எனினும் எந்தவிதமான உயிர்சேதமும் ஏற்படவில்லை, வனப்பகுதியில் குண்டுவீசிவிட்டு சென்றனர், எந்தவிதமான கட்டமைப்பும் சேதமடையவில்லை என்று பாகிஸ்தான் இராணுவச் செய்தித்தொடர்பாளர் மேஜர் ஆசிப் கபூர் தெரிவித்தார்.

இதற்கிடையே பாலகோட் பகுதியில் பைன் மரங்கள் மீது குண்டு வீசி 19 மரங்களை அழித்ததாகவும், சூழல் அழிப்பு தீவிரவாதத்தில் இந்திய இராணுவம் ஈடுபடுகிறது என்றும் ஐ.நா.வில் பாகிஸ்தான் அரசு புகார் செய்திருந்தது. மேலும், குண்டு வீசி அழிக்கப்பட்ட பகுதியில் விழுந்த மரங்கள், பாதிப்புகள் குறித்தும் ஆய்வு செய்து ஐ.நா.விடம் அறிக்கை அளிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், பாலகோட் வனப்பகுதியில் குண்டு வீசி மரங்களை அழித்ததாக இந்திய விமானப்படையின் அடையாளம் தெரியாத விமானிகள் மீது பாகிஸ்தான் வனத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

இதன் மூலம் இந்திய விமானப்படையின் குண்டுவீச்சில் யாரும் இறக்கவில்லை என்பதை மீண்டும் பாகிஸ்தான் அரசு வலியுறுத்தியுள்ளது.

# இந்திய - பாக். முரண்பாட்டை பேச்சு மூலம் தீர்க்க வேண்டும்

## வலியுறுத்துகின்றது சீனா

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க இரு நாடுகளும் நேரடியான பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என சீனா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு: –

புல்வாமாத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை இரு நாடுகளுமே பயன்படுத்தி நின்றுபோன தங்களது பேச்சுகளைத் தொடரவேண்டும். இதன்மூலம் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

பிரச்சினையை சமாதான வாய்ப்பாக இந்தியாவும், பாகிஸ்தானும் மாற்றும் என்று சீனா நம்புகிறது.

இதன்மூலம் இரு நாடுகளிடையேயான நீண்ட காலத் திட்டங்கள், இரு நாட்டு உறவுகள் மீண்டும் மலரும் வாய்ப்பு உள்ளது. அண்டை நாடான இந்தியாவுடன் சீனா நட்பு பாராட்டவே விரும்புகிறது. இந்தியாவுடனான உறவை மேலும் நெருக்கமாக்க சீனா விருப்பம் கொண்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளைக் கைவிட்டு பேச்சுக்கு முன்வரவேண்டும். அதன் மூலம் இந்த பிராந்தியத்தில் வளமான எதிர்காலத்தை உருவாக்கலாம். – இவ்வாறு அவர் கூறினார்.

(உ)

# பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் 22 பயிற்சி முகாம்கள் உள்ளன!

## இந்தியத் தரப்பில் குற்றச்சாட்டு



பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் 22 பயிற்சி முகாம்கள் இயங்குகிறன என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் இந்திய அரசின் உயரதிகாரி ஒருவர், பிடிஐ செய்தியாளரிடம் நேற்று கூறியதாவது:

தீவிரவாதத்துக்கும், தீவிரவாதிகளுக்கும் ஆகச்சிறந்த புகலிடமாக பாகிஸ்தான் விளங்கி வருகிறது. தீவிரவாதத்தை ஒரு கொள்கையாகவே அந்நாட்டு அரசு கடைப்பிடித்து வருகிறது.

தற்போதைய நிலைவரப்படி, பாகிஸ்தானில் 22 தீவிரவாத பயிற்சி முகாம்கள் இயங்கி வருகின்றன. அவற்றில், புல்வாமா தாக்குதலை நடத்திய ஜெய்ஷ் – இ – முகமது தீவிரவாத அமைப்பின் 9 பயிற்சி முகாம்களும் அடங்கும். ஆனால், இந்த பயிற்சி முகாம்கள் மீது எந்தவொரு நடவடிக்கையையும் பாகிஸ்தான் அரசு எடுக்கவில்லை. மாறாக, இந்தியாவுடன் போர் வருவது போன்ற பிம்பத்தை அந்நாட்டு மக்களிடையே ஏற்படுத்துகிறது. புல்வாமா தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தானின் பாலகோட் பகுதிக்குள் புகுந்து இந்திய விமானப் படை அதிரடி தாக்குதலை நடத்தியது.

இதனை அந்நாடு சற்றும் எதிர்பார்க்கவில்லை. இனியும், பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், பாலகோட் சம்பவத்தை போன்ற தாக்குதல்கள் பாகிஸ்தானில் நடைபெறும். எனவே, தங்கள் நாட்டில் செயல்படும் தீவிரவாத முகாம்களை பாகிஸ்தான் அரசு உடனடியாக ஒழிக்க வேண்டும். அந்தக் கட்டாயம் பாகிஸ்தானுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. – இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

(உ)

NEW ASIAN CENTER

56/15B, Stanley Road, Jaffna. T.P. 0778249949 021 221 7474

வீட்டு மின் பாவனையாளர்களே எந்தவித மின்சார கட்டணமும் இன்றி இலவசமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!



* வீடுகளில் தங்களின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவோர் அதை தங்களுக்குரிய அரிய முதலாக மாற்றும் ஒரு வாய்ப்பு.

* வழமையான மின்கட்டணத்தை நீண்ட கால சேமிப்பாக்கிக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

* மாதாந்தம் தங்கள் வீட்டுக்கு 200 யுனிற் வரை மின்சாரத்தைப் பயன்படுத்துவோர், அந்தக் கட்டணத்தைத் தொடர்ந்து 60 மாதங்கள் மட்டுமே செலுத்தியபடி, அடுத்த இருபது வருடங்களுக்கு எந்தவித மின்கட்டணமுமின்றி அதேயளவு மின்சாரத்தை தங்குதடையின்றிப் பெற இந்த முறைமை வாய்ப்பளிக்கின்றது.

* உங்கள் வீட்டில் சூரிய சக்தி மின் உற்பத்தி அலகு ஒன்றைப் பொருத்திக் கொள்ளுங்கள். சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபகரணத்துக்கு அரசு இலகு முறையில் முழு வங்கிக் கடன் தருகின்றது. அதற்கான வட்டி ஆக 6.75 வீதம்தான். இந்தக் கருவி மூலம் மாதாந்தம் சுமார் 260 யுனிற் மின்சாரம் பெற்றுக் கொள்ளலாம். வழமையான மின் கட்டணத்துக்கான கொடுப்பனவை ஐந்து வருடங்களோ அல்லது ஆறு வருடங்களோ மேற்படி மூன்றரை லட்சம் ரூபாவுக்காக அரச கடனை மீளச் செலுத்துவதற்காகக் கட்டி முடித்து விடலாம்.

* மேற்படி சூரியசக்தி மின் உற்பத்தி அலகுகள் இருபத்தியைந்து வருட செயல் உத்தரவாதம் உள்ளவை. ஐந்து அல்லது ஆறு வருட கடன் நிலுவைக் காலம் முடிந்ததும் அதன் பின்னர் அடுத்த இருபது ஆண்டு காலத்துக்கு நீங்கள் பெறப் போகின்ற மின்சாரம் உங்களுக்கு இலவசம் அல்லது உங்களுக்கு வரவு.

* உங்கள் சூரிய மின் உற்பத்திக் கருவி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தில் நீங்கள் வீட்டுக்குப் பயன்படுத்தியமை போக எஞ்சிய மின்சாரத்தை உங்களிடமிருந்து இலங்கை மின்சார சபை பணம் கொடுத்தும் வாங்கிக் கொள்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

| யுனிற் (வீதம்) | ரூ. 350,000 வட்டி (ரூபா) | நாம் செலுத்த வேண் டிய மின்சார கட்டணம் | மேலதிகமாக மின்சாரம் மின்சார நிலையத்திற்கு விற்பனை செய்தால் வருமானம் (மாதாந்தம்) | மொத்தம் | வங்கிக்கு |
|---|---|---|---|---|---|
| 200 | 1866/= | 3096/= | 1320/= | 4416/= | 72 மாதம் |
| 220 | 1866/= | 3970/= | 880/= | 4850/= | 65 மாதம் |
| 240 | 1866/= | 4920/= | 440/= | 5360/= | 58 மாதம் |
| 260 | 1866/= | 5922/= | ----- | 5922/= | 52 மாதம் |

# மெக்ஸிக்கோவில் அகதிகள் பயணித்த லொறி கவிழ்ந்து 25 பேர் நசுங்கிச் சாவு



## மேலும் முப்பது பேர் வரை படுகாயம்

மெக்ஸிக்கோ சிட்டி,மார்ச்10

மெக்ஸிக்கோவில் இடம்பெற்ற மோசமான சாலை விபத்து ஒன்றில் 25 பேர் உயிரிழந்தனர். 30 பேர் வரை படுகாயமடைந்தனர்.

மத்திய அமெரிக்க நாடுகளை சேர்ந்த அகதிகள் மெக்ஸிக்கோவில் வியாழனன்று ஒரு லொறியில் பயணம் செய்தனர். அங்குள்ள சியாபாஸ் மாகாணத்தின், சோயலோ என்ற இடத்தில் உள்ள நெடுஞ்சாலையில் அந்த லொறி சென்று கொண்டிருந்தபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அது தாறுமாறாக ஓடிக் கவிழ்ந்தது.

இதில் அந்த லொறியில் பயணம் செய்த அகதிகளில் 25 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கிப் பரிதாபமாக உயிரிழந்தனர். 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

படுகாயம் அடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களுக்கு தேவையான அவசர உதவிகளை மெக்ஸிக்கோ செஞ்சிலுவை சங்கத்தினர், மனித உரிமை பாதுகாப்பு முகமையினர், உள்ளூர் பொலிஸார் செய்தனர்.

இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், சாரதி தனது கட்டுபாட்டை இழந்தமை தான் விபத்துக்கு முக்கிய காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் புலப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து ஏற்பட்ட இந்தப் பகுதி மெக்ஸிக்கோவிலிருந்து கவுத்தமாலா, அமெரிக்காவுக்கு குடிபெயரச் செல்பவர்கள் பயணிக்கும் பிரதான இடமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலாவியில் பேய் மழை;பெரு வெள்ளம் 23 பேர் சாவு; 11பேரைக் காணவில்லை

பிளண்டைர்,மார்ச்.10

மலாவி நாட்டில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 23 பேர் பலியாகியுள்ளனர்.

தென் கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மலாவியில் கடந்த சில தினங்களாக கனமழை கொட்டி வருகிறது. குறிப்பாக மலாவி நாட்டில் தெற்கு பகுதியில் உள்ள 12 மாவட்டங்கள் கன மழையால் வெள்ளத்தில் மிதக்கின்றன. நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகரமான பிளண்டைர் நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை தொடர்பான அனர்த்தங்களில் சிக்கி 23 பேர் பலியாகியுள்ளனர். 11 பேரை காணவில்லை. ஒரு லட்சத்து பத்தாயிரம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முக்கிய சாலைகள், பாலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளமையால், மலாவியில் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு அடுத்த



வாரம் வரை விட்டு விட்டு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# அல்ஜீரியாவில் மக்கள் போராட்டம்

அதிபர் அப்தலசீஸ் பூத்தஃப்லீக்காவுக்கு எதிராக போராடும் அல்ஜீரியர்கள் தலைநகர் அல்ஜீரஸ் மற்றும் பிற நகரங்களில் பெரியளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். அதிபர் மாளிகைக்கு செல்லும் சாலையை போராட்டக்காரர்கள் சென்றடைவதை தடுக்கும் விதமாக கலவரத் தடுப்பு காவல்துறையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை பயன்படுத்தி யுள்ளனர்.

பாதுகாப்பு படைப்பிரிவுகளால் சுமார் 200 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட அப்தலசீஸ் பூத்தஃப்லீக்கா (வயது 82) எடுத்த முடிவுக்கு எதிராக இந்த போராட்டங்கள் கடந்த மாதம் தொடங்கின.

சுவிற்ஸர்லாந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அதிபர் அப்தலசீஸ் பூத்தஃப்லீக்கா, கடந்த 20 ஆண்டுகளாக அல்ஜீரியாவை ஆண்டு வருகிறார். ஆனால், 2013 ஆம் ஆண்டு பக்கவாதம் வந்த பின்னர் பொதுவெளியில் அவர் தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# டிரம்பின் முன்னாள் உதவியாளருக்கு மோசடி வழக்கில் 47மாதங்கள் சிறை



வொஷிங்டன்,மார்ச்.10

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் முன்னாள் உதவியாளருக்கு மோசடி வழக்கில் 47 மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் முன்னாள் பிரசார குழு மேலாளர் போல் மானபோர்ட் (வயது 69).

2016 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப் வெற்றி பெறவும், ஹிலாரி கிளிண்டன் தோல்வி அடையவும் ரஷ்யா நேரடியாக தலையிட்டது என்ற முறைப்பாடு எழுந்தது. இதையொட்டி ரொபர்ட் முல்லர் குழு சிறப்பு விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணை வளையத்தில் போல் மானபோர்ட்டும் சிக்கி உள்ளார்.

மேலும் இவர் உக்ரைனில் பிரசார கராக செயல்பட்டு, அதன் மூலம் பெருமளவு பணம் கிடைத்தும், அந்த வருமானத்தை மறைத்து தவறான வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்தார் எனவும், வெளிநாட்டு வங்கி கணக்குக் குறித் துக் குறிப்பிடாமல் மறைத்தார் எனவும், வங்கி மோசடியில் ஈடுபட்டார் எனவும் புகார் எழுந்தது.

இது தொடர்பாக போல் மானபோர்ட் மீது அலெக்சாண்டிரியா நகர நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு, விசாரணை நடந்தது. விசாரணையில் அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால் அவரைக் குற்ற வாளி என நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் மாதம் அறிவித்து இருந்தது.

இந்த நிலையில் அவரது தண்டனை விவரம் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு 47 மாதங்கள் சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த தண்டனை குறித்து அவர் மிகுந்த வேதனை வெளியிட்டுள்ளார்.


SUNJEYS A to Z SUPER MART

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்

100% இயந்திர மோட்டார்



பெற்றோல் தேவையில்லை. சூழல் மாசடையாது.
என்ஜின் ஒயில் மாற்றத் தேவையில்லை.
புகைப் பரிசோதனை தேவையில்லை.

**DESCRIOTION OF BIKE**

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120 - 140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost for One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4 - 6 HRS |

நம்பமுடியாத விலையில்

மாபெரும் விலைக்கழிவு

உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாகச் சேமிக்க முடியும்

85,000 ரூபாய் மட்டுமே

(கையிருப்பு உள்ள வரை மட்டுமே!!)

# 0.30/= சதம் 1 Km இயங்கும் செலவு

SUNJEYS A to Z SUPER MART

இல. 98, அரசடி வீதி யாழ்ப்பாணம். (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

021 205 3077, 0777 474 111

# அரச ஊழியர்களுக்கு இலவசமாக உள்ளூர் விமானப் பயணச் சீட்டு!

## புதிய திட்டத்தை முன்வைக்கவுள்ளார் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 10

அரச ஊழியர்களுக்கு இலவச உள்ளூர் விமானச் சீட்டு வழங்குவது தொடர்பிலான யோசனை விரைவில் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படுமென போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இவ்வருடம் ஓகஸ்ட் முதல் அரச ஊழியர்களுக்கு இலவச உள்ளூர் விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பான பேச்சுக்கள் தற்போது அமைச்சில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அரச ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஒரு வருடத்துக்கான ரயில்வே வொரன்டுகளுக்கு பதிலாக அவர்கள் உள்ளூர் விமானச் சீட்டொன்றைத் தெரிவு செய்யும் வகையிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனடிப்படையில் மூன்று ரயில்வே வொரன்டுக்களுக்கு பதிலாக அரச ஊழியர்கள் ஒரு உள்ளூர் விமான பயணச்சீட்டை பெற்றுக் கொள்ளும் வகையில் இத்தெரிவு அமையுமென்றும் அவர் விளக்கமளித்தார்.

மிக ஆரம்ப காலத்தில் மூன்று அல்லது நான்கு ரயில்வே வொரன்டுக்களைப் பயன்படுத்தாத அரச ஊழியர்களுக்கு விமானச்சீட்டு ஒன்றை வழங்கும் நடைமுறை வழக்கத்தில் இருந்துள்ளது. இது தொடர்பில்நான் தற்போது ஆராய்ந்து வருகின்றேன். அதே சலுகையை மீண்டும் அரச ஊழியர்களுக்கு வழங்கவேண்டும் என்பதே எமது விருப்பம். அமைச்சருடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் இது தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னர் விரைவில் இந்த யோசனையை அமைச்சரவைக்கு முன்வைப்போம் என்றும் இராஜாங்க அமைச்சர் அபேசிங்க தெரிவித்தார்.

இந்தத் தெரிவின் கீழ் அரச ஊழியர்கள் இரத்மலானையிலிருந்து மத்தள, மட்டக்களப்பு,திருகோணமலை,சிகிரியா,கொழும்பு,பலாலி போன்றஏதேனும்தாங்கள்விரும்பிய இடத்துக்கான பயணச்சீட்டை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# காணாமற்போனோரின் உறவுகள் மகளிர் தினத்தில் ஆர்ப்பாட்டம்



அம்பாறை, மார்ச் 10

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்கும் வரை சர்வதேச மகளிர் தினம் பெண்களாகிய எங்களுக்குக் கறுப்பு தினம் எனத் தெரிவித்து அம்பாறை மாவட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் திருக்கோவிலிலுள்ள அவர்களின் அலுவலகத்துக்கு முன்பாகக் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு எதிர்ப்பு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் வாக்ரிஷா வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றைத் தொடர்ந்து கறுப்பு கொடிகளைப் பறக்கவிட்டு அரசுக்கு எதிரான தமது கோசங்களை எழுப்பி அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். (ஐ)

# குடும்பஸ்தர் மீது அதிகாலை சூடு!

## மாவனல்லையில் பயங்கரம்

கொழும்பு, மார்ச் 10

மாவனல்லை, தனாகம பிரதேசத்தில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகிறார்.

மாவனல்லை, தனாகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான மொஹமட் தஸ்லீம் என்பவரே இவ்வாறு காயமடைந்து சிகிச்சைகளுக்காகக் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாவனல்லை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த நபர் பிரதேசத்தில் சமூக, நல்லிணக்க,. அரசியல் விடயங்களில் முன்னின்று செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மாவனல்லை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.டி.டி. நிலங்க கருத்துத் தெரிவிக்கையில்,

அதிகாலை 4.45 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான மொஹமட் தஸ்லீம் என்பவர் காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் மாவனல்லை குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி. மன்ஜுல தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

# சிலாவத்துறையில் மக்களை சந்தித்தது காணி ஆணைக்குழு

மன்னார், மார்ச் 10

சிலாவத்துறை கடற்படை முகாம் அமைந்துள்ள காணிகளை விடுவிக்கக் கோரி போராடி வரும் மக்களை, மக்கள் காணி ஆணைக்குழுவினர் நேற்று முன் தினம் சந்தித்தனர்.

மக்களின் காணிப் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றைப் பதிவு செய்தனர்.

தமது காணிகளை விடுவிக்கக் கோரி சிலாவத்துறையில் நேற்று 17ஆவது நாளாகப் போராடிய மக்களைக் காணி ஆணைக்குழுவினர் சந்தித்தபோது, தமது பாரம்பரிய நிலங்கள் மட்டுமே தமக்கு தேவையென்றும், வேறெந்த சமரசத்துக்கும் தாம் தயாராக இல்லை என்றும் தெரிவித்தனர்.

ஆரம்பப் பாடசாலை, கூட்டுறவு சங்கம், பிரதேச சபை கட்டடங்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளன என்று மக்கள் குறிப்பிட்டனர்.


280 முஸ்லிம் குடும்பங்களின் 36 ஏக்கர் காணிகளும் கடற்படையின் பிடியில் சிக்கியுள்ளன.

ஒரு பக்கம் கடற்படை முகாம். இன்னொரு பக்கம் இராணுவ முகாம். இன்னொரு பக்கம் பொலிஸார். நாங்கள் எங்கே சென்று வாழ்வது? பரம்பரையாக வாழ்ந்த நிலத்திற்கு செல்லவே விரும்புகிறோம். டிசெம்பர் 31ம் திகதிக்குள் தனியார் காணிகள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி சொன்னார். ஜனாதிபதியின் நடவடிக்கைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் என ஒரு பெண்மணி குறிப்பிட்டார்.



இதேவேளை, பள்ளிமுனையிலுள்ள மக்களையும் மக்கள் காணி ஆணைக்குழு நேற்றுமுன்தினம் சந்தித்தது. அங்கு பொதுமக்கள் 23 பேரின் வீடுகளை கடற் படையினர் அபகரித்து முகாம் அமைத்துள்ளனர். (ஐ)

# படைமுகாமை அகற்றக்கோரி மட்டக்களப்பில் போராட்டம்



மட்டக்களப்பு, மார்ச் 10


மட்டக்களப்பு – முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமை அகற்றி அங்குள்ள பாடசாலைக் கட்டடத்தை விடுவித்துத் தருமாறும், மக்கள் போக்குவரத்துக்குரிய வீதியைத் திறந்து தருமாறு கோரியும் இராணுவ முகாமுக்கு முன்பாக பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முறக்கொட்டாஞ்சேனை, தேவபுரம் கிராம சமூக அமைப்புகளின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், கோறளைப்பற்று பிரதேசசபை உப்பினர்களான க.கமலேஸ்வரன், கு.குணசேகரம், சு.சுதர்ஷன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு – வாழைச்சேனை பிரதான வீதியில், இராணுவ முகாமுக்கு முன்பாக கூடிய பொது மக்கள் எமது காணி எமக்கு வேண்டும், இராணுவமே வெளியேறு, பாடசாலைக் காணியை உடன் விடுவி போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கையில் ஏந்தியவாறு கோஷமிட்டனர்.

போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கும், மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரச அதிபருக்குமான மகஜரை வியாழேந்திரன் எம்.பியிடம் பொதுமக்களின் பிரதிநிதிகள் கையளித்தனர். (ஐ)

# இலங்கைப் பெண்ணுக்கு அமெரிக்க உயர் விருது!




கொழும்பு, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அமெரிக்காவில் வழங்கப்படும் உலகளாவிய ரீதியிலான விருதுக்கு இலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி மெர்லின் டி லிவேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் சிறந்த 10 பெண்களுக்கு ஆண்டு தோறும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த விருதை வழங்குகிறது.

பெண்கள், சிறுவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து செயற்பட்டு வரும் இலங்கையின் சட்டத்தரணி மெர்லின் லிவேராவையும் இந்த ஆண்டின் விருதுக்குரியவராக அமெரிக்கா அறிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

சந்தியா எக்னொலிகொட, ஜன்சிலா மஜீத் ஆகிய இலங்கை பெண்கள் ஏற்கனவே இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவராகவும் மெர்லின் லிவேரா கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir
ஞாயிற்றுக்கிழமை 10.03.2019 09

# அரசை 'தாஜா' செய்து சமாளித்துச் செயற்படும்

## அரசியல் உத்தியை கையாண்டு வரும் தமிழ் அரசியல்வாதிகள்!

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா மனித உரிமைச் சபையின் செயற்பாடுகளில் முற்றுமுழுதாக நம்பிக்கையிழந்த தமிழ் மக்கள், சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றின் ஊடாக ஈழத் தமிழர்கள் விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு மக்களிடம் காணப்படுன்றது. இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதால் அரசியல் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையீனங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் தமிழ் இனப்படுகொலைதான் நடந்தது என்பதை மூடி மறைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என, மக்கள் மத்தியில் வலுவான சந்தேகங்களும் நிலவுகின்றன. இந்த நிலையில் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் வட மாகாணத்திற்குச் சென்று மக்களின் கருத்துக்களை அறிகின்றனர்.

அமெரிக்கத் தூதுவர் அலெய்னா றெப்லிட்ஸ், பிரித்தானியத்தூதுவர்ஜேம்ஸ் டௌரிஸ், சீனத் தூதுவர் செங் யுவான், நெதர்லாந்துத் தூதுவர் ஜோன்னே டோர்னிவோர்ட், சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் சமஷ்டித் திணைக்கள மூத்த ஆலோசகர் மார்ட்டின் ஸ்ரோர்சிங்கர், நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மரியன் ஹகென் உள்ளிட்ட பலர் வட மாகாணத்திற்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்குச் சென்று தற்போதைய நிலைமைகளை மக்களிடம் கேட்டு அறிகின்றனர்.

ஈழத் தமிழர்களின் சுயாட்சி அதிகாரங்கள் தொடர்பான விதப்புரைகள் எதுவுமே ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்படவில்லை. வெறுமனே போரின் பக்கவிளைவுகள் தொடர்பாக மாத்திரமே அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், யாழ் படைகளின் தளபதி உள்ளிட்ட இலங்கை அரச உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடுகின்றனர்.

சந்திப்புக்களில் பங்குபற்றிய பொது மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்வியாளர்கள் ஜெனீவா மனித உரிமைச் சபையின் செயற்பாடுகளில் நம்பிக்கையிழந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு நல்லிணக்கம் எனக் கூறிக்கொண்டு சர்வதேச ஆதரவுடன் ஆட்சியமைத்த மைத்திரி – ரணில் அரசு கடந்த மூன்றரை ஆண்டுகளில் எதுவுமே செய்யவில்லையென யாழ் பல்கலைக் கழக ஊடகத்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரகுராம் நெதர்லாந்துத் தூதுவர் ஜோன்னே டோர்னிவோர்ட் உள்ளிட்ட குழுவிடம் கூறியுள்ளார்.


அதேவேளை, ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான அறிக்கை மீது எதிர்வரும் 20ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மேலும் இரண்டு வருடகால அவகாசத்தைக் கோரவுள்ளது.

ஜெனீவா மனித உரிமைச் சபையின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தவும் அதற்கு இலங்கை அரசு மனித உரிமைச் சபையுடன் இணைந்து செயலாற்றும் என்றும் ரணில் விக்கிரமசிங்க அரசின் பிரதிநிதிகள் வாக்குறுதி அளிக்கவுள்ளனர்.

ஜெனீவாவுக்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கடந்த புதன் கிழமை இலங்கை நாடாளுமன்றத்திலும் அறிவித்துள்ளார்.

இந்த வாக்குறுதிக்குப் பக்கபலமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பங்காளியாக இணைத்துள்ளது. இதனை ஜெனீவா மனித உரிமைச் சபையும் வரவேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே, தமிழ் இனப்படுகொலைகள் பற்றிய விசாரணைகள், அரசியல் விடுதலைக்கான இருதரப்புப் பேச்சுகள் அனைத்தும் நீக்கம் செய்யப்படும் நிலை ஏற்படலாம் என யாழ் மறை மாவட்ட அருட்தந்தை ஒருவர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரிடம் கூறியுள்ளார்.



இதேவேளை, இலங்கையுடன் தொடர்ந்து நெருக்கமான உறவைப் பேணுமாறும், இலங்கையில் என்ன நடக்கிறதெனக் கண்காணிக்குமாறும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர், சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கவுள்ளார்.

தற்போது ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 40 ஆவது கூட்டத்தொடரில் அவர் சமர்ப்பிக்கவுள்ள இலங்கை குறித்த அறிக்கையின் வரைவு இலங்கை அரசின் பதிலைப் பெறுவதற்காக இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட பின்னர், கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

இலங்கையில் சித்திரவதை, போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றைப் புரிந்தவர்களுக்கு எதிராக சர்வதேச நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தி சர்வதேச நாடுகள் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்த அறிக்கையில் ஆணையாளர் பரிந்துரை செய்துள்ளார்.

மனித உரிமை விடயங்களில் இலங்கையின் அரசு சிறிதளவு முன்னேற்றம் கண்டுள்ளபோதிலும், நிலைமாறு கால நீதி குறித்த விடயத்தில் தாமதம் நிலவுவதாகவும், கால அட்டவணை இன்றி இலங்கை செயற்படுவது அதற்கு ஒரு முக்கிய காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றவியல் பொறுப்புக் கூறல் தொடர்பான சிறப்பு நீதிப் பொறிமுறையை அமைப்பதற்கான திட்டம் எதையும் இலங்கை அரசு வெளியிடவில்லை எனவும், மாறாக அத்தகைய பொறிமுறை தேவையற்றதென ஜனாதிபதியும், பிரதமரும் கூறியுள்ளனர் எனவும் மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ளார்.

போரின் இறுதிக் காலத்தில் இடம் பெற்ற மீறல்கள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அவர் குறை கூறியுள்ளார்.

இலங்கை அரசை முடிந்தவரை சமாளித்துச் செயற்படும் அரசியல் உத்தி ஒன்றையே தமிழ்ப் பிரதிநிதிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் கையாண்டு வருகின்றமை தற்போது வெளிப்படையாகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ரீதியிலான கருத்தறியும் கலந்துரையாடல்கள் என்பவற்றுக்கு போதுமான அரசியல் ஆதரவு வழங்கப்படவில்லையெனவும், பொறுப்புக் கூறலுடனும், மீளிணக்கத்துடனும் அவை போதுமான அளவு தொடர்புபடுத்தப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அதனால் தமிழ் மக்களின் கருத்தறிய யாழுக்கு படையெடுக்கும் இராஜதந்திரிகள்

இலங்கையில் முன்னேற்றம் போதுமான அளவு இடம்பெறாதமையால், இலங்கை குறித்த விடயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் கட்டாயமாக தொடர்ந்து ஆராயப்படவேண்டுமென மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

காணிகளின் ஒப்படைப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டம், அதற்குப் பதிலாக உருவாக்கப்படும் சட்டம், திருகோணமலை மாணவர்கள் ஐந்து பேரின் படுகொலை உட்பட்ட முக்கியமான மனித உரிமை மீறல் வழக்குகள், கடந்த ஆண்டின் முற்பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை என்பன குறித்தும், கடந்த ஒக்ரோபரில் ஆரம்பமாகி டிசெம்பர் வரை நீடித்த அரசியல் குழப்பம் குறித்தும் இந்த அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஈழத் தமிழர்களின் சுயாட்சி அதிகாரங்கள் தொடர்பான விதப்புரைகள் எதுவுமே ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்படவில்லை.

வெறுமனே போரின் பக்கவிளைவுகள் தொடர்பாக மாத்திரமே அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தேர்தல் அரசியலில் வெற்றிபெற்று இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்றத்தில் பதவிகளைப் பெறும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவது போன்று ஏனைய தமிழ்க் கட்சிகளும் தற்போது சிந்திக்க ஆரம்பித்துள்ளன.

ஜெனீவா மனித உரிமைச் சபையின் மூலமான ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையை சில தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வருகின்றன.

ஆக, இலங்கை அரசை முடிந்தவரை சமாளித்துச் செயற்படும் அரசியல் உத்தி ஒன்றையே தமிழ்ப் பிரதிநிதிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் கையாண்டு வருகின்றமை தற்போது வெளிப்படையாகின்றன.

தமிழ் இனப் படுகொலை எனவும் போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை அவசியம் எனவும் வடமாகாண சபையில் இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தன.

அந்தத் தீர்மானங்களை முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இதுவரை ஜெனீவா மனித உரிமைச் சபைக்கு அனுப்பி வைக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்த இரண்டு தீர்மான்ங்களையும் அப்போது வரவேற்றிருந்தது. ஆனால் இதுவரை அந்த இரண்டு தீர்மானங்களையும் சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லவில்லையென குற்றச்சாட்டுக்களும் எழாமல் இல்லை.

இந்த நிலையில் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனீவாவுக்குச் சென்றுள்ளார்.

நன்றி - கூர்மை இணையம்

> “ஈழத் தமிழர்களின் சுயாட்சி அதிகார்ங்கள் தொடர்பான விதப்புரைகள் எதுவுமே ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட வில்லை. வெறுமனே போரின் பக்கவிளைவுகள் தொடர்பாக மாத்திரமே அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன.”

## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

# யாழ்ப்பாணக் கம்பன் விழா

# மார்ச் 15,16,17 ஆம் திகதிகளில்!

உயர் கம்பனின் புகழ்பாடி நமது தமிழ்மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் முயற்சியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் கடந்த 39 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. ஆண்டு தோறும் கம்பனின் பெயரால் இயல், இசை, நாட்டிய விழாக்களை எமது கழகம் நடத்தி



வருவதை அனைவரும் அறிவர். தற்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாக அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் முயற்சிகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. கம்பன் கழகத்தின் கம்பன் விழாக்களின் வரிசையில் 2019 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கம்பன் விழா எதிர்வரும் மார்ச் 15,16,17 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது. இவ்விழாவின் காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன்கோட்ட மண்டபத்திலும் மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதலாம் நாளான மார்ச் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் தட்சணாமூர்த்தி உதயசங்கர் குழுவினரின் மங்கல இசையுடன் விழா நிகழ்ச்சிகள் இனிதே ஆரம்பிக்கவுள்ளன. சமயத் தலைவர்களான நல்லை ஆதீனத்தின் முதல்வர்



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், பாதுகாவலன் இதழ் ஆசிரியர் அருட்திரு எயின்சிலி றொசான் அடிகளார் அவர்களும், முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் இமாம் மௌலவி எம். றழீம் அவர்களும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பிக்கவுள்ளனர்.

யாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ. விஸ்வநாதன் அவர்களின் தலைமை



யில் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் வட மாகாணசபை அவைத்தலைவர் சீ.வி. கே. சிவஞானம் தொடக்கவுரையை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சினிமா இயக்குநரும் இலக்கியச் சொற்பொழிவாளருமான பாரதி கிருஷ்ணகுமார் அவர்களின் சிறப்புரை 'முதல் நூலும் முதன்மை நூலும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது. நிறைவாக பொன்னாலை சந்திரபரத கலாலய அதிபர் ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் அவர்களின் மாணவிகளின் 'தமிழ்





## காலை நிகழ்வுகள் நல்லூர் கம்பன் கோட்டத்தில்
## மாலை நிகழ்வுகள் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில்

அமுதம் எனும் நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறவுள்ளது.

**விழாவில் கலந்துகொள்ளும் தமிழ்நாட்டு அறிஞர்கள்**

புகழ்பெற்ற பேச்சாளர்களான சினிமா இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார், பேராசிரியர் இராம சௌந்தரவள்ளி, கலாநிதி இரா. மாது ஆகிய அறிஞர்கள் இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டிலிருந்து வருகை தரவுள்ளனர்.

**விழாவில் கலந்துகொள்ளும் நம்நாட்டு பிரமுகர்கள்**

தேசிய ஒருமைப்பாட்டு, அரசகரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து



சமய கலாசார அமைச்சர் மனோ கணேசன், வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம், யாழ். மாநகர மேயர் இமானுவேல் ஆனல்ட், இந்தியத் துணைத்தூதுவர் எஸ். பாலச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன், வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஏ. வரதராஜப்பெருமாள், வட மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா, வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடகிழக்கு மாகாண கலை, பண்பாட்டு அலுவலக அமைச்சு முன்னாள் செயலர் சுந்தரம் டிவகலாலா, தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் அதிவண.எஸ்.ஜெபநேசன் ஆகிய நம்நாட்டுப் பிரமுகர்களும் இவ்வாண்டு விழாவில் கலந்து கொள்ளவுள்



ளனர்.

**கம்பன் விழா நிகழ்ச்சிகள்:**

இவ்வாண்டுக் கம்பன்விழாவில்; எழிலுரை, நாட்டியவேள்வி, இலக்கியப் பேருரை, உரையரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம், கருத்தரங்கம், விவாத அரங்கு, வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

**விழாவில் கலந்துகொள்ளும் நம்நாட்டு அறிஞர்கள்:**

இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் கம்பவாரிதி இ. ஜெயராஜ், கலாநிதி ஆறு திருமுருகன், கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் தி. வேல்நம்பி, செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல், வலம்புரி ந. விஜயசுந்தரம், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன், கவிஞர் ஜின்னாஷெரிபுதீன், கவிஞர் ச.முகுந்தன், கவிஞர் நாக. சிவசிதம்பரம்,



கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார், ந. ஐங்கரன், விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, த.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

**மங்கல இசை**

விழாவின் மாலை நிகழ்ச்சிகளில் தினமும் மாலை 4.30 மணி முதல் நம் நாட்டின் பிரபல மங்கல இசைக்கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. முதலாம் நாளில் த. உதயசங்கர் குழுவினரதும், இரண்டாம் நாளில்



வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரதும், மூன்றாம் நாளில் பி. ரஜீபன் குழுவினரதும் மங்கல இசைக் கச்சேரிகள் நடைபெறவுள்ளன.

**புத்தக, சி.டி விற்பனை**

விழா நாள்களில் மண்டப வாயிலில் கம்பன் கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களும் இறுவட்டுக்களும் கம்பவாரிதி இ.ஜெயராஜின் சொற்பொழிவுகளின் இறுவட்டுக்களும் இதுவரை நடைபெற்ற கம்பன் விழாக்களின் இறுவட்டுக்களும் விற்பனைக்காக வைக்கப்படும்.

**இரசிகர்களுக்கு வேண்டுகோள்**

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளமையால் இரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகைதந்து விழாவைச்சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில் சரியாக 9.30 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 1.00 மணிவரையும், மாலை நிகழ்ச்சிகள் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் மாலை 4.30 மணி முதல் இரவு 9.00 மணிவரையும் நடைபெறவுள்ளன. கழக முகவரிப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டோருக்கு அழைப்பிதழ்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மற்றைய தமிழ் இரசிகர்களுக்கு ஊடகங்கள் மூலம் விழாவுக்கான அழைப்பை கம்பன்கழகம் மனமகிழ்வுடன் விடுக்கிறது. (இ

# வாக்கிய 'நஞ்சாங்கத்திற்குத்' தடை வருமா?

கடந்த 3 ஆம் திகதி ஞாயிறன்று 'நஞ்சாங்கம் தடை செய்யப்படுமா? என்ற தலைப்பில் இந்தக் கட்டுரையின் முதற் பகுதி வெளியாகி இருந்தது. அதன் தொடராக இன்று இந்தச் கட்டுரை வெளியிடப்படுகிறது.

நாஸா ஆகாயக் கலண்டரில் (Google - Nasa Sky Calendar) பாருங்கள். இலங்கை இந்தியப் பொதுநேரப்படி அமாவாசை, பூரணை விவரங்கள் உள்ளன. இவற்றுடன் வாக்கியத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். வாக்கியத்தில் வருடம் முழுவதும் பிழை இருப்பதைக் காண்பீர்கள். அமாவாசை, பூரணையில் மட்டுமல்ல, அனைத்துத் திகதிளிலும் பிழைகள் இருக்கின்றன. பல நாள்களில் 4, 5 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட பிழைகளும் உள்ளன. நட்சத்திரம், நவக்கிரக சஞ்சாரங்கள் அனைத்திலும் பிழைகள் தொடர்கின்றன. இவற்றை நிரூபிக்கும் இன்னொரு ஆதாரம் இந்திய அரசு வெளியிடும் கிரக சஞ்சாரம் (Google - Indian Government Ephemeris). மிகப் பெரிய, 11 மாத வித்தியாசம் சனி மாற்றத்தில் உள்ளது. மகர ராசிக்குச் சனிப் பெயர்ச்சி திருக்கணிதப்படி 25-01-20 வாக்கியப்படி 27-12-20.

ரிஷிகள் அருளிய வேதாந்தத்தின் ஒரு பகுதியே சோதிடம். இதனுடன் சம்பந்தப்பட்டதே பஞ்சாங்கம். வரருச்சி முனிவர் அருளியதே வாக்கிய பஞ்சாங்கம். இதனையே சமய அனுஷ்டானங்களுக்குப் பின்பற்ற வேண்டும் என்று சொல்கிறார்களே! ஆம்! அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வாக்கியத்தை, அதில் சொல்லியவாறு சரியாகக் கணித்தால், அதனைப் பின்பற்றலாம். சூரிய பகவான் மேட ராசியில் 0 பாகையில் பிரவேசிக்கும் மேட ரவி, புது வருடம் பிறக்கும் நேரம் அட்டவணை 4ல் உள்ளது. நாடி விநாடியில் உள்ள நேரத்தை மணி நிமிடமாக மாற்றுவதற்கு, அதனை 2.5ஆல் பிரித்து, சூரிய உதயத்துடன் கூட்டப்பட்டுள்ளது. அட்டவணை 4ல் இருப்பதுதான் வாக்கியக் கணிப்பு. இது சரியா? இல்லை! சூரியனின் மேட ராசிப் பிரவேசம் உலகம் முழுவதிலும் ஒரே கணப் பொழுதில் நிகழும். இலங்கை இந்தியப் பொதுநேரம் நடைமுறையில் உள்ள சகல இடங்களிலும் ஒரே மணி நிமிடத்தில் மேட ரவி நிகழும். அட்டவணை 4ல் மணி நிமிடத்தில் மேட ரவியில் வித்தியாசம் இருப்பதால், அதில் பிழைகள் உள்ளன.

வரருச்சி முனிவர் அருளிய வாக்கிய பஞ்சாங்கம் லங்கா மத்திய ஸ்தானத்திற்குரியது. யாழ்ப்பாணம் லங்காவில் தானே இருக்கிறது. இதனை மத்திய ஸ்தானமாகக் கொண்டு கொக்குவிலில் வாக்கியத்தைக் கணிப்பது சரிதானே! இல்லை! அப்படி என்றால் இன்னொரு லங்காவும் உள்ளதா? ஆம்! இருக்கிறது. ஆனால், அது நிலப்பரப்பில் இல்லை. 75 பாகை 46 கலை கிழக்கு ரேகாம்சத்தில் இந்தியாவில் இருக்கும் உஜ்ஜைனிக்கு நேரே தெற்கில், இந்து சமுத்திரத்தில் பூமத்திய ரேகையில் உள்ள ஒரு கற்பனை செய்யப்பட்ட இடம். இதன் அட்சாம்சம் 0 பாகை, ரேகாம்சம் 75 பாகை 46 கலை கிழக்கு. இவ்விடத்திற்குச் சொல்லப்பட்ட வாக்கிய பஞ்சாங்கத்தை ஏனைய இடங்களில் கணிப்பதற்குத் தேசாந்தர சம்ஸ்காரம் செய்ய வேண்டும். இவ்வாறு இ.சி. இரகுநாதையர் பரகிதம் 69ம் பக்கத்தில் (ஆதாரம் 4) எழுதியுள்ளார். இதனை எழுதியவர் வாக்கிய பஞ்சாங்கத்தைச் சரியாகத் தானே கணித்திருப்பார். இல்லை! அவர் மட்டுமல்ல, வாக்கிய பஞ்சாங்க சரித்திரத்தில் இன்றுவரை எவரும் ஆதாரம் 4ல் உள்ளவாறு சரியாகக் கணிக்கவில்லை . யாராவது சரியாகக் கணித்திருந்தால், ஏனையோர் அதனைப் பின் தொடர்ந்து இருப்பார்கள். யாழ்ப்பாணத்திற்குத் தேசாந்தர சம்ஸ்காரம் செய்யாத கொக்குவில் வாக்கியத்தினரது கணிப்பை யாழ்ப்பாணத்தை மத்திய நாடியாகக் கொண்டு கணிக்கப்பட்டது என்று சொல்வது பிழை. தேசாந்தர சம்ஸ்காரம் செய்த கணிப்பு அட்டவணை 5ல் உள்ளது. இவ்வாறு தேசாந்தர சம்ஸ்காரம் செய்தால் வாக்கியம் சரியாகி விடுமா? இல்லை! வேறு பல பிழைகளும் உள்ளன. இவற்றை ஒட்டு மொத்தமாகத் திருத்துவதற்கு ஒரு வழி இருக்கிறது. அது என்ன? பிஜ சம்ஸ்காரம் செய்யலாம். இதனை ஏன் செய்யாது இருக்கிறார்கள்?

18 சித்தாந்தங்களில் ஒன்று சூரிய சித்தாந்தம். இதனை அடிப்படையாகக் கொண்டதே வாக்கிய பஞ்சாங்கம். கிரக சஞ்சாரங்களைப் பார்த்து, அவ்வப்போது கணிப்புகளில் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும். இதனைப் பிஜ சம்ஸ்காரம் என்று சொல்வார்கள். இவ்வாறு சூரிய சித்தாந்தத்திலே உள்ளது. (Google - Suriya Siddhanta pdf) Page 22. வாக்கியத்தினர் இவ்வாறு செய்து பிழைகளைத் திருத்துவதில்லை . இதனைச் செய்வது கஷ்டமா? இல்லை! மிகவும் சுலபம். தற்போது Ephemeris கிரக சஞ்சாரக் கணிப்புகளைப் பார்த்து மிகச் சுலபமாகப் பிஜ சம்ஸ்காரம் செய்யலாம். இவ்வாறு செய்தால், வாக்கியத்திற்கும் திருக்கணிதத்திற்கும் வித்தியாசம் இருக்காது. எது சரி என்ற பிரச்சினையும் வராது.

| அட்டவணை 4 - தற்போதைய வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு முறை | | | | |
|---|---|---|---|---|
| இடம் | லங்கா | உஜ்ஜையினி | யாழ்ப்பாணம் | சென்னை |
| 14-04-2019 மேட ரவி நா:வி | 17-49 | 17-49 | 17-49 | 17-49 |
| 2.5ல் பிரித்து ம:நி ஆக மாற்றல் | 07:07 | 07:07 | 07:07 | 07:07 |
| சூரிய உதயம் | 06:27 AM | 06:12 AM | 06:05 AM | 06:02 AM |
| மேட ரவி ம:நி | 01:34 PM | 01:19 PM | 01:12 PM | 01:09 PM |

## இ.சி. இரகுநாதையர் எழுதிய, கணித சிந்தாமணியின் புட கணிதப் படலமாகிய பரகிரதம் 69ம் பக்கம்

### தேசாந்தர சம்ஸ்காரம்

மேற்சொல்லிய கிரகபுடங்கள் யாவும் கிறீன்விச்சிலிருந்து கிழக்கே 75 பாகை 46 கலை ரேகாம்சத்தில் அமைந்துள்ள உஜ்ஜயினி நகருக்குச் சரியான ரேகாம்சத்தில் பூமத்தியரேகையில் அமைந்துள்ளதாகக் கொள்ளப்படும் "இலங்கா" என்னும் இடத்தின் மத்திம ([illegible]) சூரியோதயாதி நாடிவிநாடிகளுக்கே சரியாகவிருக்கும். ஆதலின், மற்றைய இடங்களுக்குப் புடங் கணிக்க வேண்டின், அவ்வவ்விடத்தின் சூரியோதயாதி நாடிவிநாடிகளை இலங்கையின் மத்திம சூரியோதயாதி நாடிவிநாடிகளாகச் சம்ஸ்காரஞ்செய்தே புடங் கணித்தல் வேண்டும்.

இதில் சொல்லியவாறு கணிக்காது வாக்கிய பஞ்சாங்கத்தினர் பிழை விடுகின்றனர்.

நீங்கள் பார்க்கக்கூடிய கிரகணத்தைக் கோட்டை விட்டால், பிழையைப் பிடித்து விடுவீர்கள். இதற்குப் பயந்து வாக்கியத்தினர், அதை மட்டும் திருக்கணிதத்தில் கொப்பியடிக்கிறார்கள். ஆதாரம் வேண்டுமா? வாக்கிய கலண்டர்களில் கிரகணவிவரங்கள் எதுவும் இருப்பதில்லை. இதைக் கணிக்கத் தெரியாதவரது வாக்கிய பஞ்சாங்கத்தில் இவ்விபரங்கள் எப்படி வருகின்றன? மார்கழியில் வெளி வரும் திருக்கணித பஞ்சாங்கத்தில் 2612 - 19 முற்பகல் 11:21 வரை சூரிய கிரகணம் தோற்றும் என்று சரியாகவும், கிரகணம் முடிந்த பின்னர் செய்ய வேண்டிய பிரதமைச் சிராத்தத்தை மறுநாள் செய்க என்று பிழையாகவும் உள்ளது. இதே பிழை வாக்கியத்திலும் இருக்கிறது. கொப்பியடிக்காமல் இது சாத்தியம் ஆகுமா? ஏனைய கணிப்புகளில் திருக்கணிதத்தில் நிலைமை எப்படி? சில பிழைகள் இருந்தன. இப்போது நல்ல முன்னேற்றம்.

| அட்டவணை 5 - சரியான வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பு முறை | | | | |
|---|---|---|---|---|
| இடம் | லங்கா | உஜ்ஜையினி | யாழ்ப்பாணம் | சென்னை |
| 14-04-2019 மேட ரவி நா:வி | 17-49 | 17-49 | 17-49 | 17-49 |
| தேசாந்தர சம்ஸ்காரம் | ------- | 00-37 | 00-55 | 01-02 |
| திருத்தம் செய்த நேரம் | 17-49 | 18-26 | 18-44 | 19-51 |
| 2.5ல் பிரித்து ம:நி ஆக மாற்றல் | 07:07 | 07:22 | 07:29 | 07:32 |
| சூரிய உதயம் | 06:27 AM | 06:12 AM | 06:05 AM | 06:02 AM |
| மேட ரவி ம:நி | 01:34 PM | 01:34 PM | 01:34 PM | 01:34 PM |

எங்களது பாரம்பரியம். அதைக் காப்பாற்ற வேண்டும் என்று வேறு சிலர் பேசுகிறார்களே! விபச்சாரி,..யமதூதவன் விவாஹ முகூர்த்தம் உள்ள பஞ்சாங்கமா எமது பாரம்பரியம்? அதனையா காப்பாற்ற வேண்டும்? தேச வழமைச் சட்டத்தைச் சொல்லி வாக்கியத்தினர் தப்பலாமா? 1952ல் இந்தியப் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள், பஞ்சாங்கக் கலண்டர்களை ஆராய ஓர் ஆணைக்குழுவை நியமித்தார். அவர்கள் திருக்கணிதமே சரி என்று 1955ல் பரிந்துரைத்தார்கள் என்பது இந்தியச் சரித்திரம். வாக்கியத்தினர் அப்போதே வியாபாரத்தை முடித்துச் சரித்திரமாயிருக்க வேண்டும். நல்ல நீதிவானிடம் மாட்டினால், அன்றிலிருந்து இன்று வரை 60 வருடங்களுக்கு மேலாக மக்களை ஏமாற்றுவதற்கு மிகப் பெரிய தண்டம் விதிப்பார். எனவே, பொல்லுக் கொடுத்து அடி வாங்காதீர்கள்.

மஹா பாரதப் போரில் வெல்வதற்கு, அதனை ஆரம்பிக்கச் சிறந்த நாள் எதுவென்று, பஞ்ச பாண்டவர்களில் இளையவராகிய சகாதேவனிடம் கேட்டான் துரியோதனன். பிழையான முகூர்த்தம் நிச்சயித்து எதிரியைக்கூட ஏமாற்றக்கூடாது என்கிறது சோதிட தர்மம். இதற்கமைய, ஆடி அமாவாசையன்று போரை ஆரம்பிப்பது சிறந்தது என்றார் சகாதேவன். இவர் சொன்னால் பிழைக்காது. ஆடி அமாவாசையில் யுத்தம் தொடங்கினால் பாண்டவர்கள் தோற்பார்கள். இதனை நன்கு அறிந்த கிருஸ்ண பகவான், பாண்டவர்களது வெற்றிக்காகச் சூழ்ச்சி செய்தார். மாதம் தோறும் செய்யும் அமாவாசைத் தர்ப்பணத்தை ஒரு நாள் முன்னர் செய்தார். இதனைப் பார்த்த துரியோதனன், அன்று அமாவாசை என்று நினைத்துப் போரைப் பிழையான நாளில் ஆரம்பித்துத் தோல்வி அடைந்தான்.

சூரியனும் சந்திரனும் கிருஸ்ண பகவானிடம் சென்று நாளைய அமாவாசைக்கு, ஏன் இன்று தர்ப்பணம் செய்கிறீர்கள்? என்று கேட்டனர். சூரியனும் சந்திரனும் ஒன்றாக இருக்கும் நாளே அமாவாசை. நீங்கள் இருவரும் இங்கே ஒன்றாக இருப்பதால் இன்று தானே அமாவாசை என்று தமாஸாகச் சொன்னார் கிருஷ்ண பகவான். நிஜமான அமாவாசை அன்றுதான் அதற்குரிய பலன் நிகழுமே தவிர, சூரியன், சந்திரனையும் தமாஸாகச் சந்திக்கச் செய்யும் நாளில் அல்ல. இதே போன்று, சுத்தப் பிழையான வாக்கியப்படி செய்வதால் எவ்வித சுப பலனும் கிடையாது. வாக்கியம் மக்களின் பாவனைக்கு உகந்ததல்ல, வெளியிடக் கூடாது என்று தடை விதித்துச் சரித்திரம் ஆக்குவதைத் தவிர வேறு வழி எதாவது உள்ளதா? தகுந்த நடவடிக்கை எடுத்து இலங்கைச் சைவத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டியது சட்டத்தைக் கையில் வைத்திருப்பவர்களது கடமை.

- கனடாவிலிருந்து கௌசிகர் -

## தவக்காலத்தை மையப்படுத்திய திருத்தந்தை டுவிட்டர் செய்தி

06 மார்ச் 2019 அன்று துவங்கியுள்ள தவக்காலத்தை மையப்படுத்தி திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் தவக்காலப் பயணம் இன்று துவங்குகிறது. தன் இருகரம் விரித்து காத்திருக்கும் தந்தையிடம் திரும்பி வரும் வண்ணம் மனமாற்றத்துடனும் தவ முயற்சிகளுடனும் இக்காலத்தை வாழ உங்களை அழைக்கிறேன் என்கிறார். இவ்வாண்டும் திருத்தந்தை பிரான்சிஸ் தவக்காலத்தின் முதல் பாவமன்னிப்பு பவனியையும் திருநீற்றுப் புதன் திருப்பலியையும் நடத்தினார்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான்:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## திருநீறு வரலாறு

தவக்காலத்தின் அடையாளமாக விளங்கும் சாம்பல் ஆரம்ப காலத்தில் பாவங்களுக்காக கடினமான ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்வோர் தங்கள் மீது பூசிக்கொண்ட அடையாளமாக இருந்தது. நாளடைவில் அனைவரும் பூசிக்கொள்ளும் சாம்பலாக மாறி திருப்பலியின் ஒரு பகுதியாக மாறியது. முன்பு நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய் என்று கூறப்பட்ட சொற்கள் தற்போது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என மாறியுள்ளன.

# மண்ணுக்கும் மக்களுக்கும் பணியாற்றியோரை கௌரவிப்பதில் எமது ஊடகம் பெருமையடைகிறது

## ஐ.பி.சி. தமிழ் ஊடக குழும முதல்வர் கந்தையா பாஸ்கரன்







தாயகத்தின் ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு ஐ.பி.சி தமிழ் ஊடக குழும முதல்வர் கந்தையா பாஸ்கரன் அவர்களின் ஏற்பாட்டில் 27 பெப்ரவரி 2019 அன்று வலம்புரி விருந்தினர் விடுதியில் நடைபெற்ற போது ஐம்பது படைப்பாளிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் திருமறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஓய்வுநிலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகைக்கும் இந்த வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. ஐ.பி.சி தமிழ் ஊடக குழும முதல்வர் கந்தையா பாஸ்கரனின் சிந்தனையில் உதயமான இந்த மகத்தான நிகழ்வு தாயகத்தின் கலைஞர்களை தட்டிக் கொடுத்து அருகிவரும் தமிழரின் கலைகளையும் படைப்பாக்கங்களையும் முன்னுக்குக் கொண்டு வருவதாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த முதல்வர் கந்தையா பாஸ்கரன் போர்க்காலத்தில் ஏராளமான கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து இந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் பாடுபட்ட உங்களை கௌரவிப்பதில் ஐ.பி.சி தமிழ் ஊடகம் பெருமையடைகிறது. எதிர்காலத்திலும் இதுபோன்ற நிகழ்வுகளை முன்னெடுத்து தட்டிக்கொடுப்பதற்கு ஐ.பி.சி தமிழ் ஊடகம் என்றுமே தயாராக இருக்கிறது. - என்றார்

# உண்மையின் எண்ணங்கள்

## ஐ.பி.சி தமிழ் ஊடகத்தின் கௌரவிப்பு

தாயகத்தின் ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு ஐ.பி.சி. தமிழ் ஊடக குழும முதல்வர் கந்தையா பாஸ்கரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றிருப்பது சிறப்பானது. பணிபுரிபவர்கள் பாராட்டப்பட வேண்டும். அவர்கள் வாழும் போதே வாழ்த்தப்பட வேண்டும். இதனால் இவர்கள் ஆற்றிய பணிக்கு கைமாறு கிடைத்ததாக மகிழ்ச்சியடைவர். இன்னும் பணியாற்ற வேண்டும் என மன உறுதி பெறுவர்.

இவர்களை பராமரிப்பவர்கள் தாமும் பணிபுரியவேண்டும் என்ற உந்து சக்தி பெறுவர். மேற்படி நிகழ்வில் திருமறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாருக்கும் ஓய்வு நிலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகைக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை பாராட்டப்படத்தக்கது.

இவர்கள் இருவரும் தம் தன்நலம் கருதாத ஆற்றிய பணிக்காக நிச்சயம் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். திருமறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாருக்கும் ஓய்வு நிலை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகைக்கும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம். வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்த ஐ.பி.சி தமிழ் ஊடக குழும முதல்வர் கந்தையா பாஸ்கரன் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

# நெடுந்தீவு பிரதேச அரச சமூக மட்ட பிரதிநிதிகளுடனான கருத்தமர்வு



கியுடெக் கரித்தாஸ் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான சமூக மேம்பாட்டுப்பணிகள் பற்றி நெடுந்தீவு பிரதேச அரச சமூக மட்ட பிரதிநிதிகளுடனான கருத்தமர்வு 22.02.2019 வெள்ளிக்கிழமை அன்று நெடுந்தீவு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச செயலக கணக்காளர் தலைமையில் நடைபெற்றது. இதில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள், தென்னிந்திய திருச்சபை போதகர், நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கியுடெக் கரித்தாஸ் இயக்குநர் ச.இயுஜின் பிரான்சிஸ் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில், சமாதான நல்லிணக்க சமூக மேம்பாட்டுக்கான சவால்களும் எதிர்கொள்ளும் வழிகள் பற்றியும் கலந்துரையாடி செயற்படுவதில் தான் வெற்றி பெறமுடியும். சமூக மட்டத்தில் செயற்படும் ஒவ் வொரு விடயங்கள் ஊடாகவுமே சமாதான நல்லிணக்க சமூக மேம்பாட்டை முன்னெடுப்பதாக அமைய வேண்டும். இனமத சமூக நல்லுறவு பலமடையும் போது தான் அமைதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். இப்பிரதேசம் பல்வேறுபட்ட சுற்றுலா பயணிகளால் கவரக்கூடியதான அழகிய இடமாக மாறுகையில் எமது சமூக பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்துவதில் சகல மட்டத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று கூறினார்.

# கரித்தாஸ் கியுடெக் வன்னி நிறுவனத்தால் வெள்ள நிவாரணப் பொதிகள்



உடையார்கட்டு பகுதி வெள்ளப்பள்ள கிராமத்தில் இருக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு கரித்தாஸ் கியுடெக் வன்னி நிறுவனத்தால் 28.02.2019 அன்று வெள்ள நிவாரண பொதிகள் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.

# புனரமைக்கப்பட்ட தருமபுரம் பங்கு கல்லாறு குழந்தை இயேசு ஆலயம்



தருமபுரம்பங்கு கல்லாறு குழந்தை இயேசு ஆலய புனரமைப்பு வேலைகள் வெளியூர் மற்றும் உள்ளூர் ஆலய மக்களினதும் இந்து சமய மக்களினதும் பங்களிப்போடு பங்குத் தந்தை அன்ரனி சில்வெஸ்ரர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டது. 03 மார்ச் 2019 அன்று யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளாரால் ஆலயம் அபிசேகம் செய்யப்பட்டு திருவிழா பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# கேப்பாபிலவு மண்மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு முல்லைத்தீவு மறைக்கோட்டத்தை சேர்ந்தோர் ஆதரவு



யேசுக்கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு போன்ற பாஸ்கா மறைபொருளை கொண்டாடுவதற்காக ஆயத்தம் செய்கின்ற 40 நாள்களை கொண்ட தவக்காலத்தின் முதலாம் நாள் முல்லைத்தீவு மறைக்கோட்டத்தை சேர்ந்த கத்தோலிக்க குருக்களும் துறவிகளும் கேப்பாபிலவு மண்மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் இணைந்து தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். தவக்காலத்தில் நோன்பிருந்து பிறரன்பு செயல்களில் ஈடுபட வேண்டுமென கத்தோலிக்க திருச்சபை எம்மை பணிக்கின்றது. மற்றவருக்காக எம்மை அர்ப்பணித்து வாழ அழைக்கப்பட்ட இத் தவக்காலத்தில் அனைவருக்கும் முன்மாதிரியாக செயற்பட்ட கத்தோலிக்க குருக்கள் துறவிகளின் செயற்பாடு நிச்சயமாக பாராட்டுக்குரியது.

# தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலய திருவிழாவை முன்னிட்டு வர்ணம் புசப்பட்டது

தாண்டவன் வெளி காணிக்கை அன்னை ஆலய திருவிழாவை முன்னிட்டு பங்குத்திருச்சபை இறைமக்களின் பங் களிப்புடன் ஆலய உட்புறம் வெளிப்புறம்



ஆகியவற்றிற்கு வர்ணம் பூசும் வேலைகள் நடைபெற்று நிறைவு பெற்றுள்ளன. பங்களிப்புச் செய்த அனைத்து இறைமக்களுக்கும் அன்பார்ந்த நன்றிகள். காணிக்கை அன்னையின் அருளும் ஆசீரும் நிறைவாக கிடைப்பதாக.



# பெண்மையின் சிறப்பு

பல பெண்கள் பெண்ணியம் என்றால் ஆண்கள் செய்யும் எல்லாவற்றையும் செய்வது என்று தவறாக புரிந்து கொள்கிறார்கள். சிலர் ஆண்கள் இல்லாமல் வாழ முடியும் என்றும் எண்ணுகிறார்கள். அது சரியல்ல. பெண்ணியம் என்பது ஆண்களால் செய்ய முடியாதவற்றையும் செய்து காட்டுவது தான்.

ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு பின்னாலும், அவர்களை புரிந்து கொண்ட அப்பா, சகோதரன், கணவன், நண்பன் என்று ஓர் ஆண் உறுதுணையாக இருக்கிறான். ஆண்கள் இல்லாமல் வாழ்க்கை நன்றாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்காது. யோசித்து பாருங்கள். ஆண்கள் இல்லையேல் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, காதல் போன்ற குணாதிசயங்களை நாம் வெளிப்படுத்துவோமா!

இயல்பாகவே பெண்களால் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய முடியும். உதாரணத்திற்கு நாம் தினமும் பார்க்கும் ஒரு விஷயத்திற்கு வருவோம்.

சில ஆண் பிரபலங்கள் என் மனைவி வீட்டில் அனைத்தையும் பார்த்துக்கொள்கிறாள். எனவே தான் என்னால் எந்த கவலையும் இல்லாமல் என் வேலையில் கவனம் செலுத்த முடிகிறது. வெற்றி பெற முடிகிறது என்று கூறுகிறார்கள். கணவனிடம் இப்படி ஒரு பாராட்டு பெறுவது என்பது ஒரு மனைவிக்கு மிக பெரிய விடயமாகும். ஆனால் எந்த பெண் பிரபலமும் தன் கணவனை பற்றி இவ்வாறு குறிப்பிட்டு கேட்டதில்லை. பெரும்பாலும் என் குடும்பம் எனக்கு உறுதுணையாக இருந்தார்கள் என்றே கூறியுள்ளனர். காரணம், பெண்கள் குடும்பம் மற்றும் செய்யும் தொழில், இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுகின்றனர்.

இது தான் பெண்மையின் சிறப்பு போலும்.

ஆகையால் பெண்களே, உங்களால் வீட்டையும் வேலையையும் திறம்பட செய்ய முடியவில்லை என்று வருந்தவோ அல்லது குற்ற உணர்வோ கொள்ளாதீர்கள். ஆரம்பத்தில் இரண்டையும் சமாளிப்பது கடினமாக இருக்கும். ஆனால் சிந்தித்து, பகுத்தாய்ந்து, சரியாக திட்டமிட்டு செயல்படுத்தினால் உங்களால் முடியாதது எதுவுமில்லை. நீங்கள் ஒன்றும் ரோபோ அல்ல, எல்லாவற்றயும் குறைபாடு இல்லாமல் செய்வதற்கு. உங்களால் முடிந்தவற்றை மட்டும் செய்யுங்கள், ஆனால் செய்வதைச் சிறப்பாச் செய்யுங்கள். ஆண்களால் நமக்கு உதவ தான் முடியுமே தவிர பெண்களை போல் வேலைகளைச் செய்ய முடியாது. குறிப்பாக வீட்டு வேலைகளை. உங்கள் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பதை மனதில் கொள்ளுங்கள்.

இந்த தலைமுறை ஆண்களிடம் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் வலிகளை, நிலைமையை புரிந்து கொள்கிறார்கள். அம்மா, மனைவி, சகோதரி, தோழி என தன்னை சுற்றி உள்ள பெண்களுக்கு முடிந்தவரை உதவுகிறார்கள், பக்கபலமாகவும் இருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்று தான். அவர்கள் நமக்கு செய்யும் உதவி மனதளவில் எவ்வளவு மகிழ்ச்சியை தருகிறது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதே ஆகும்.

கோடிக்கணக்கில் சம்பாதிப்பவர்கள், தங்கள் துறையில் பெரிய நிலையில் இருப்பவர்கள் , பேரும் புகழும் பெற்றவர்கள் மட்டும் வெற்றியளர்கள் அல்ல. உடல் அளவிலும் மனதளலும் ஆயிரம் கஷ்டங்கள் இருந்தாலும் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் வீட்டிலும் அலுவலகத்திலும் தங்கள் கடமையை செம்மையாக செய்யும் அனைத்து பெண்களும் வெற்றி பெண்மணிகளே!

ஒரு பெண்ணின் முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பது ஆண்கள் மட்டும் அல்லர் பெண்களும் தான். இன்றும் பல தாய்மார்கள் தம் பிள்ளைகளை ஆண் என்றால் வேலைக்கு சென்று பணம் சம்பாதிக்க வேண்டும். பெண் சமையல் மற்றும் வீட்டு வேலைகள் தான் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வளர்க்கிறார்கள். உங்கள் மகளுக்கும் இலட்சியங்கள் உண்டு. அதை அடைய ஊக்குவியுங்கள். வேலைக்கு செல்வதும் வீட்டில் இருந்து கொண்டு குடும்பத்தை கவனிப்பதும் (இல்லதரசியாக இருப்பது) அந்த பெண்ணின் விருப்பமாக தான் இருக்க வேண்டுமே தவிர மற்றவர்களின் கட்டாயமாக இருக்கக் கூடாது.

அன்புள்ள ஆண்களே,

நீங்கள் எங்களை போற்றிப் புகழ வேண்டாம். எங்களுக்கான மதிப்பையும் மரியாதையயும் கொடுங்கள். அதுவே போதுமானது.

அன்புள்ள பெண்களே,
நல்லதையே எண்ணுங்கள்
நல்லவற்றையே செய்யுங்கள்!

உங்கள் இலக்குகளை கடின உழைப்பாலும் சாமர்த்தியத்தாலும் அடையுங்கள்

ஒவ்வொரு நிமிடத்தையும் அனுபவித்து வாழுங்கள்.

# முகத்திலுள்ள சுருக்கத்தை நீக்கும் கற்றாழை....!



நமது தோலில் நீரை விட நான்கு மடங்கு வேகமாக கற்றாழைச் சாறு ஊடுருவக் கூடியது. விற்றமின் சி மற்றும் பி சத்துகளும் தாதுக்களும் நிறைந்தவை இச்சாறு. தோல் இறுக்கத்திற்குசுகமளிக்கும் மருந்தாகிறது.

சருமத்திலுள்ள கொலா ஜன் எனப்படும் கொழுப்புச் சத்தை குறைக்கக்கூடிய புரோட்டீன் கற்றாழையில் அதிகம் காணப்படுவ தால் முகத்திலுள்ள சுருக்கம் வயோதிக தோற் றத்தைக் குணப்படுத்துகிறது.

தோல் இறுக்கத்திற்கு சுகமளிக்கும் மருந்தாகிறது. இந்த எண்ணெய் பெண்களின் மாதாந்திர ருதுவை ஒழுங்குபடுத்தும். கர்ப்பவதிகளுக்கு கருச்சிதைவை உண்டாக்கும்.

இளம் வயதிலேயே, சரும சுருக்கம் ஏற்பட்டு, முதுமை தோற்றத்தை அடைகின்றனர். எனவே இன்றைய இளம் வயதினர் தினமும் கற்றாழை ஜெல்லை சருமத்திற்கு பயன்படுத்தினால், இத்தகைய பிரச்சினையைத் தடுக்கலாம்.




# சத்து நிறைந்த கீரை ஆம்லெட்



**தேவையான பொருள்கள் :**
ஏதாவது ஒரு கீரை– ஒரு கப்
நாட்டு முட்டை - 3
வெங்காயம் - ஒன்று
ப.மிளகாய் - 2
மிளகுதூள் - அரை கூதக்கரண்டி
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை :**

ப.மிளகாய், வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். கீரையை நன்றாக சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றி, அதனுடன் உப்பு, மிளகுதூள் சேர்த்து நன்றாக அடித்து கொள்ளவும்.

சட்டியை அடுப்பில் வைத்து அரை தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி சூடானதும். ப.மிளகாய், வெங்காயத்தை போட்டு சிறிது வதக்கிய பின்னர் சுத்தம் செய்த கீரை, உப்பு சேர்த்து வதக்கவும்.

கீரை பாதியளவு வெந்ததும் இறக்கி முட்டை கலவையில் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும்.

தோசை கல்லை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி, சூடானதும் முட்டைக் கலவையை ஆம்லெட்டாக ஊற்றி வேகவிடவும். ஒரு பக்கம் வெந்ததும் மறுபக்கம் திருப்பிப் போட்டு வேக வைக்கவும். வெந்ததும் விரும்பிய வடிவில் வெட்டி எடுக்கவும்.




# கூந்தல் நீளமாக வளர இயற்கை வழிகள்...

சிலருக்கு எந்த எண்ணெய் தேய்த்தாலும் கூந்தல் வள்ராது. அவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இயற்கை வழிமுறைகளை பின்பற்றி வந்தால் 3 மாதங்களில் நல்ல பலனைக் காணலாம்.

அரைமுடி தேங்காயுடன், இரண்டு சிறிய வெங்காயம் சேர்த்து அரைத்து, சாற்றை மட்டும் எடுத்து தலையில் தேய்த்து, ஒரு மணி நேரம் ஊற விடுங்கள். பின், வழக்கமான ஷாம்பூ அல்லது சீயக்காய் தேய்த்து தலைக்கு குளியுங்கள். பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை இவ்வாறு குளிக்கலாம். வெறும் தேங்காய்ப் பாலை தலைக்கு தேய்த்து ஊற வைத்தும் குளிக்கலாம்.

கற்றாழையின் நடுவில், கத்தியால் நீள மாக ஒரு கீறல் போடுங்கள். உள்ளே உள்ள கொழ கொழப்பான சோற்று பகுதியில், கையளவு வெந்தயத்தைப் போட்டு, கற்றாழையை பழையபடி மூடி, நூலால் கட்டி விடவும். உள்ளே இருக்கும் சோற்றில் ஊறும் வெந்தயம், இரண்டு நாள்களில் முளை கட்டியிருக்கும். அதனுடன் கற்றாழையின் சோற்றையும் எடுத்து, நன்றாக அரைத்து வடையாக தட்டி வெயிலில் உலர்த்தி, தேங்காய் எண்ணெயில் போட்டு, ஊறவிட்டு தலைக்கு தினமும் பூசி வர, முடி நன்றாக வளரும். மேலும் தலைக்கு எண்ணெய்மசாஜ் செய்யவும் பயன்படுத்தலாம்.

செம்பருத்தி இலைகளை கொதி நீரில் போட்டு, டிகாஷனை எடுத்தும் குளிக்கலாம். செம்பருத்தி பூவை, தேங்காய் எண்ணெயில் ஊற விட்டு தொடர்ந்து பயன்படுத்தி வரலாம்.



முன்னணி வீரர்களுக்கு ஓய்வு:

# மூன்று புதுமுக வீரர்களுடன் ஆஸியை எதிர்கொள்கிறது பாக்.

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும், பாகிஸ்தான் அணி விவரம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இம்மாத இறுதியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கிடையில் இந்தத் தொடருக் கான 16 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அணித்தலைவரான சப்ராஸ் அஹமட்டுக்கு வாய்ப்பு வழங்கப்பட வில்லை.

தென்னாபிரிக்கா தொடரின்போது பெலுக்வாயோவை நோக்கி, இனவெறி தொடர்பாக பேசியதால், நான்கு போட்டி யில் விளையாட சப்ராஸ் அஹமட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. இதன் பின்னணி யிலேயே அவருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அணியின் தலைவராக சகலதுறை வீரர் சொயிப் மாலிக் தொடர்ந்தும் நீடிக் கின்றார்.

மேலும், பல முன்னணி வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய பாபர் அசாம், ஹசன் அலிஷஹீன் அப் ரிடி, பகர் சமான், சதாப் கான் மற்றும் தாலட் ஹீசைன் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு பதிலாக உமர் அக் மல், ஜுனைத்கான் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், மூன்று புதுமுக வீரர்கள் ஒருநாள் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

25 வயதான துடுப்பாட்ட வீரர் சாட் அலி, பந்துவீச்சாளரான மொஹமட் ஹஸ்னைன் மற்றும் துடுப்பாட்ட வீர ரான அபிட் அலி ஆகியோரே அணிக் குள் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து ஐந்து மாதங்கள் விளை யாடிவருவதால், எதிர்வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு குறித்த முன்னணி வீரர்களுக்கு, ஓய்வளிக்கப் பட்டுள்ளதாக அணி நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

சொயிப் மாலிக் தலைமையிலான அணியில், அபிட் அலி, பஹீம் அஷ்ரப், ஹரிஸ் சொஹைல், இமாட் வசிம், இமாம் உல்ஹக், ஜுனைத்கான், மொஹமட் அப்பாஸ், மொஹமட் அமிர், மொஹமட் ஹஸ்னைன், மொஹமட் ரிஸ்வான், சாட் அலி, உமர் அக்மல், உஸ்மான் ஷின்வரி, யாசிர் ஷா, ஷான் மசூத்.

இரு அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின், முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி சார்ஜா மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாணவிகள் இருவர் றோல் போல் போட்டியில் சாதிப்பு



கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சி உருத் திரபுரத்தை சேர்ந்த மாணவிகள் இருவர் இந்தியாவில் இடம் பெற்றஆசியக்கிண்ண றோல் போல் போட்டி யில் விளையாடி இலங் கைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த தினகராசா சோபிகா, நடராசா வினுசா ஆகிய இருவரும் தேசிய றோல் போல் அணியில் விளையாடி சாதித்துள்ளனர். ஆசியக் கிண்ண றோல் போல் போட்டிகள் பெப்ரவரி 21ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதிவரை இந்தியாவில் இடம்பெற் றன. அதில் இலங்கை அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் விளை யாடிய உருத்திரபுரத்தை சேர்ந்த தினக ராசா சோபிகா, நடராசா வினுசா மாணவிகள் இருவரும் சாதனை புரிந்தனர்.

மாணவி நடராசா வினுசா சிறந்த பந்து காப்பாளர் என்ற விருதையும் பெற்றுக்கொண்டார்.

இவர்களையும் இவர்களை பயிற் றுவித்த கிளிநொச்சியைச் சேர்ந்த விக்ரர் சுவாம்பிள்ளை என்பவருக்கும் கிளிநொச்சி மாவட்டம் சார்பாக கிளி நொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் பாராட்டுக்களைத் தெரிவித் துள்ளார். (ஐ)

# கோஹ்லி மற்றும் சக அணி வீரர்களுக்கு தனது ஹோட்டலில் விருந்தளித்த டோனி!



இந்திய அணியின் விக்கெட் காப்பாள ரான எம்.எஸ்.டோனி, ராஞ்சியில் உள்ள தனது ஹோட்டலில் சக வீரர்களுக்கு விருந்து கொடுத்தார்.

இந்தியா–ஆஸ்திரேலியா அணிக ளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று இந்திய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக் கிறது.

இரு அணிகளுக்கும் இடை யிலான 3ஆவது ஒருநாள் போட்டி ராஞ்சியில் நேற்று முன்தினம் நடந்தது. இது டோனியின் சொந்த ஊராகும். மேலும் இங்கு அவருக்குச் சொந்தமாக ஹோட்டல் உள் ளது.

இந்நிலையில், இந்திய வீரர்கள் 3ஆவது ஒருநாள் போட்டியில் பங்கேற்க ராஞ் சிக்குச்சென்றிருந்தனர். அங்கு தனது ஹோட்டலில் சக அணி வீரர்களை வரவேற்ற டோனி, அவர்க ளுக்கு இரவு விருந்து அளித்தார். இந்த விருந்தில் கலந்துகொண்ட அணித்தலை வர் விராட் கோஹ்லி மற்றும் சுழற்பந்து வீச்சாளர் சாஹல், விருந்து தொடர்பான புகைப் படத்தை டுவிட்டரில் வெளியிட் டுள்ளனர். (ஐ)

# கங்குலியின் இந்திய அணியில் விஜய் சங்கருக்கும் வாய்ப்பு!



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலை வரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாள ருமான சவுரவ் கங்குலியின், உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில், சகலதுறை வீரரான விஜய் சங்கருக்கு வாய்ப்பு அளிக்கப்பட் டுள்ளது.

அண்மைய காலமாக இந்தியா அணிக்காக விளையாடி, வெகுவாக அனைவரினதும் கவ னத்தை ஈர்த்த விஜய் சங்கர், உலக்கிண்ண தொட ருக்கான இந்திய அணியில் விளையாட வேண்டு மென பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த பின்னணியில், கங்குலி அவரின் விருப்பத்திற்கு ஏற்ப, உலக்கிண்ண தொடருக் கான இந்திய அணியை அறிவித்துள்ளார்.

விராட் கோஹ்லி தலைமையிலான அணியில், ஷிகர் தவான், ரோஹித் சர்மா, ராகுல், அம்பதி ராயுடு, டோனி, கேதர் ஜாதவ், ஹர்த்திக் பாண்ட்யா, விஜய்சங்கர், குல்தீப்யாதவ், சாஹல், பும்ரா, மொஹமட் ஷமி, புவனேஸ்வர்குமார், உமேஷ் யாதவ் ஆகியோரை அவர் தெரிவு செய்துள்ளார்.

இந்த அணி தெரிவு குறித்து அவர் கூறுகை யில், இந்திய அணி வேகப்பந்து வீச்சில் சிறப்பாக உள்ளது. பும்ரா, மொஹமட் ஷமி போன்ற வேகப் பந்து வீச்சாளர்கள் நிலையான திறமையை வெளிப் படுத்தி வருகிறார்கள். இங்கிலாந்தில் நடக்கும் உல கக்கிண்ண தொடரில் வேகப்பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு முக்கிய அங்கம் வகிக்கும்.

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் சகலதுறை வீரர் விஜய்சங் கரின், பந்துவீச்சு நேர்த்தியாக இருந்தது. அவர் உலகக்கிண்ண தொடருக்கான அணியில் இடம் பெற தகுதியானவர்.

உலகக்கிண்ணத் தொடரில் தவான், ரோஹித் சர்மா ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்க வேண்டும். 3ஆவது வரிசையில் விராட் கோஹ்லியும், அதன்பின் அம்பதி ராயுடு, டோனி, கேதர் ஜாதவ் ஆகியோர் களம் இறங்க வேண்டும். அணி தேர்வில் கண்டிப்பாக விஜய்சங்கர் தேர்வா ளர்களுக்குச் சவாலாக இருப்பார் என கூறினார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், எதிர்வரும் ஜுன் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மொத்தமாக 10 அணிகள் பங்கேற்கும் இத் தொடரில், 45 லீக் போட்டிகள் மற்றும் 3 வெளி யேற்று போட்டிகள் என 48 போட்டிகள், சுமார் 12 நகரங்களில் நடக்கவுள்ளன.

# டோனி வெளியே ரிஷப் பந்த் உள்ளே!

ஆஸ்திரேலியா அணிக்கெதி ரான எஞ்சியுள்ள இரு ஒருநாள் போட்டிகளில், இந்திய அணி யின் விக்கெட் காப்பாளர் டோனிக்கு ஓய்வளிக்கப்பட்டுள் ளது.

அதிக சுமை காரணமாக அவருக்கு ஓய்வளிக்கப்பட்டுள் ளதனை, துடுப்பாட்ட பயிற்சியா ளர் சஞ்சய் பங்கர் உறுதி செய் துள்ளார்.

டோனிக்கு பதிலாக மற் றொரு இளம் விக்கெட் காப்பா ளரான ரிஷப்பந்த் அணியில், சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று முன் தினம் ராஞ்சியில் நடைபெற்ற மூன்றா வது போட்டியில், கால் உபாதைக்குள் ளான மொஹமட் ஷமி தற்போது மருத்து வச் சோதனைகளை மேற் கொண்டு வரு கிறார்.



அவருக்கு ஓய்வு தேவைப்படும் பட்சத் தில் அல்லது அவர் உடற்தகுதியை எட்டத்தவறும் பட்சத்தில் மற் றொரு வேகப்பந்து வீச்சாள ரான புவனேஸ்வர் குமார் அணி யில் இணைவார் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின், மூன்று போட்டிகள் நடைபெற்று முடிந் துள்ள நிலையில், இதில் 2-1 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கிடையி லான நான்காவது ஒருநாள் போட்டி இன்று மொஹாலி மைதானத்தில் நடைபெறவுள் ளது.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் ஆளுநர் வடக்கு மக்களின் சார்பில் தான் ஜெனீவா செல்கிறார் என்றும் வடக்கு மக்களின் கருத்தையே அங்கு வெளிப்படுத்தப் போகிறார் என்றும் அவர் பேசக்கூடாது. அவ்வாறு பேசுவாராயின் மாற்று நடவடிக்கைளை நாங்கள் எடுக்க நேரிடும் என்றும் சுமந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.

யாழ். பிரதான வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு ஆளுநர் ஜெனீவா செல்லவுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஜெனீவாவுக்குச்செல்வது குறித்து எமது மக்கள் விசனம் கொள்ளத் தேவையில்லை. அவர் எங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரல்லர். ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்பட்ட முகவர்தான். ஆகையினால் ஜனாதிபதியின் சொற்படிதான் அவர் நடப்பார்.

இதனால்தான் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு என்று நாங்கள் கேட்கிறோம். அதனை நாங்கள் மட்டுமல்ல, தெற்கில் உள்ள ஏழு மாகாண சபைகளினதும் முதலமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட ஆளுநரிடம் உள்ள அதிகாரங்கள் முற்றுமுழுதாக நீக்கப்படவேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கின்றார்கள்.

ஏனென்றால் அதிகாரப்பகிர்வு என்பது மக்களிடம் கொடுக்கப்படவேண்டியதாக இருக்கிறது. மக்களிடம் அதிகாரத்தைப்பகிர்ந்து கொடுப்பதாக இருந்தால் மக்கள் பிரதிநிதிகள்தான் அந்த அதிகாரத்தை உபயோகிக்கவேண்டும். ஜனாதிபதி நியமிக்கின்ற ஒருவர் அந்த அதிகாரங்களை உபயோகிக்க முடியாது.

ஆகவே வடக்கு ஆளுநர் அதனைச் செய்வதை நாங்கள் தடுக்க முடியாது. ஏனெனில் அவர் ஜனாதிபதியின் முகவர். ஆனால் வடக்கு மக்கள் சார்பில் தான் இதனைச் சொல்கின்றேன் என்று அவர் பேசக்கூடாது. அப்படி அவர் பேசுவாராயின் மாற்று நடவடிக்கைகள் உடனடியாக நாங்கள் எடுக்க நேரிடும்.

இதேவேளை, இலங்கை ஏற்கனவே பொறுப்பேற்ற விடயங்களை இலங்கை துரிதமாகச் செய்து முடிக்கவேண்டும் என்று மக்கள்தான் சொல்லவேண்டும். மக்கள் அதனை அவரிடம் சொல்லவில்லை. ஆகவே மக்களிடம் கேட்டதாகச் சொல்லிவிட்டு யாரோ ஓரிருவர் சொல்வதைப் போய்ச் சொல்லப்போகின்றாரோ தெரியவில்லை.

ஆகவே அவர் இவ்வாறு எதனையும் செய்ய முடியாது. இந்த விடயங்களில் மக்கள் தெளிவான ஆணையை எங்களிடம் கொடுத்து இருக்கிறார்கள். ஆகையால் எங்கள் நிலைப்பாடு என்பது பொறுப்பெடுத்துக்கொண்ட விடயங்களை இலங்கை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்பது தான் – என்றார். (ஐ-07)

## மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வந்திருந்த நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க செயலர் மரியன் ஹகென் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவில்லை என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல குற்றம்சாட்டியிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட நோர்வே தூதரக பேச்சாளர், கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான சுமார் 7 மில்லியன் டொலர் நிதியுதவியை அறிவிக்கவும், வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பகுதிகளைப் பார்வையிடவுமே குறுகிய பயணமாக, நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்கச் செயலர் கொழும்பு வந்திருந்தார்.

அவரது வருகை வடக்குக்கான பயணத்துடன் தொடர்புடையது. அவரது நிகழ்ச்சி நிரல் மிகவும் இறுக்கமானதாக இருந்தது.

இது பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் தவிர, எதிர்க்கட்சித் தலைவரையும் ஏனைய அரசியல் தலைவர்களையும், சந்திக்கத் தடையாக அமைந்தது – என்று கூறியுள்ளார். (ஐ)

## ஆங்கிலமொழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் 2ஆம் மொழியாக ஆங்கில மொழியைக் கற்க வேண்டுமென்ற திட்டம் மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆகும்.

ஆனால் அந்தப் பாடத்தை முறையாகக் கற்பிப்பதற்குத் தற்போதைய ஆசிரியர்கள் இல்லாமை பெரும் குறைபாடாகும்.

கொழும்பிலுள்ள முக்கிய பாடசாலைகளிலும் இந்தக் குறைபாடு காணப்படுகின்றது. எனினும் தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியில் இணையத்தின் மூலம் ஆங்கிலத்தைக் கற்க முடியும். அதற்கு மாணவர்கள் முயற்சிக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இறுக்கமான காலவரையறை வழங்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

யாழ். பிரதான வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்துவிடயங்களையும் வரவேற்கிறோம். இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இறுக்கமான காலவரையறை வழங்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு இணங்கக் கூடிய ரோம் சட்டத்துக்கு இலங்கை இணங்கவேண்டும் என்று கூறப்பட்டிருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

பாதுகாப்புச்சபையூடாக இந்த விடயங்களைக் கையாள முடியாது. அவ்வாறு முடியும் என்று கூறுபவர்கள் அதனைச் செய்யலாம். நாங்களும் அதனை வரவேற்போம்.

இந்த வருடமும் இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில்தான் எமக்கு இருக்கின்ற பலமான பொறிமுறை. ஆகவே அந்தப் பொறிமுறையை விலக்கிக்கொள்வது கூடாது. இலங்கை ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் உள்ளடக்கங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்வதன் காரணமாகப் புதிய தீர்மானத்தில் ஒரு கால அட்டவணை கொடுப்பது பற்றி இந்த நாடுகள் ஆராயவேண்டும் என்பது எமது கோரிக்கை – என்றார். (ஐ-07)

## பெரமுனவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கண்டியில் நடைபெற்ற 'பொறுத்தது போதும்' பொதுக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் கலந்துகொள்ளவில்லை.

அதற்கு பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பதில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளே காரணமாகும். கூட்டணி அமைப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்றுக்கு வரும் வரை பொதுஜன பெரமுனவின் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லையென கட்சி தீர்மானித்தது. இதனாலேயே நாம் கலந்துகொள்ளவில்லை.

எனக்கு இந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கான நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் கட்சியின் தீர்மானத்தைக் கருத்திற்கொண்டு அதில் கலந்துகொள்ளவில்லை – என்றார். (ஐ)

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வை வழங்குவதன் மூலம் அந்தப் பிரதேசத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டமை மகிழ்ச்சிக்குரிய விடயம்.

அத்துடன், சம்பளத்தை அதிகரிப்பதிலும் பார்க்கப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான விலைக்கட்டுப்பாட்டுக்கான மூலோபாயங்களை அரசு முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

## கொடிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் தெரிவித்தன.

மோட்டார் சைக்களிலில் பயணித்த குலேந்திரநாதன் பிருந்தன் (வயது-19) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த எஸ்.சதீஸ்தரன் (வயது -32) என்ற பிரதேச சபை ஊழியர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

கொடிகாமம் – கச்சாய் வீதியில் நேற்று முன் தினம் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்துக்குள்ளாகி இரத்த வெள்ளத்தில் கிடந்த இருவரையும் யாரும் உடனடியாக மீட்க யாரும் முன்வரவில்லை. இதனால் கொழுத்தும் வெயிலில் வெகு நேரம் விபத்துக்கு உள்ளானவர்கள் கிடந்துள்ளனர்.

பின்னர் ஆட்டோ ஒன்றில் ஏற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-07)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் போராட்டம் 2 வருடத்தை கடந்துள்ளதையடுத்து கவனவீர்ப்புப் போராட்டமும் கையெழுத்து வேட்டையும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று திருகோணமலை – கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களைச் சேர்ந்த கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் முடிவில் ஆளுநர் செயலகத்திலிருந்து திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு ஊர்வலமாக சென்று வழிப்பாட்டில் ஈடுபட்டனர்.

கையெழுத்திடப்பட்ட படிவங்கள் ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகக் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டோரின் திருகோணமலை மாவட்ட சங்கத் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார். (ஐ)

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

தெற்கில் மாத்தறை மாவட்டத்தை மையப்படுத்தி கடந்த 2 ஆம் திகதி அலுவலகம் நிறுவப்பட்டது.

வடக்கு, கிழக்கு தெற்கு உட்பட நாட்டில் 8 பிராந்திய அலுவலகங்களை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ள காணாமல்போனோர் பணியகம், இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இவ் வருடத்துக்குள் இறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே காணாமல்போனோர் பணியகம் அமைக்கப்பட்டது.

கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும், மஹிந்த அணியும் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

இதனால், மேற்பட்டி சட்ட வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை வருடத்துக்குப் பிறகே பணியகத்துக்கான தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களை 2018 பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார்.

கடந்த காலத்தில் காணாமல்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விவரங்களை அறிந்துகொள்ளவும், தகவல்களை உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே இக்குழுவின் நோக்கமாகும்.

காணாமல்போனவர்கள் சம்பந்தமாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை முன்வைத்தல், காணாமல்போனோர் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் பற்றுதல்களைப் பாதுகாத்துக்கொள்ளல், அறிவுறுத்தல், அரச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் கண்டுபிடிப்பதற்கு முடியாமல்போன நபர்களின் விபரங்கள் அடங்கிய தரவுகளைத் திரட்டி மத்திய தரவு வலையமைப்பொன்றை ஏற்படுத்தி கோர்வைப்படுத்தல் போன்ற பணிகளை இக்குழு முன்னெடுக்கவுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் பணியகம் அமைப்பதற்காகவும் அதன் செயற்பாடுகளுக்காகவும் 1.3 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்ட காணாமல்போனோர் தொடர்பான பணியகத்தின் உறுப்பினர்கள், காணாமல்போனவர்களின் உறவினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி சாட்சியங்களைப் பதிவு செய்தனர். இதனை அடிப்படையாகக்கொண்டு இடைக்கால அறிக்கையொன்றையும் முன்வைத்தனர்.

மஹிந்த ஆட்சிக் காலத்திலும் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. மைத்திரி – ரணில் கூட்டாட்சியிலும் அந்தக் குழு செயற்பட்டு தமது இறுதி அறிக்கையைக் கையளித்தமை தெரிந்ததே.

## கொழும்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸ் தரப்பு தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தென்னிலங்கை பாதாள உலகக் கும்பலுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்வதுடன், வவுணதீவுப் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் இந்தக் குழுவே சம்பந்தப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

2007ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீது நடத்திய எல்லாளன் நடவடிக்கையில் கலந்துகொண்டு, தாக்குதலின் பின்னர் தப்பிச்சென்ற வேதன் என்பவரே இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாதாள உலகக் குழுவினரை விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்து வேட்டையாடி வந்த நிலையில் இந்தக் குழு பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியுடன், கடற்படை சிப்பாய் மற்றும் பலர் இணைந்து செயற்படுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இவர்களில் 16பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், இந்த குழுவுக்குச் சொந்தமான ஆயுதங்கள் ஏற்கனவே கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் மார்ச் மாதம் அத்துருகிரியவில் வர்த்தகர் ஒருவர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டையும் இந்தக் குழுவே மேற்கொண்டுள்ளது.

சிறையிலுள்ள பாதாள உலகக் கும்பல் ஒன்றின் தலைவரால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே இந்தத் தாக்குதல் நடந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

2017இல் முல்லேரியாவில் நடந்த கொலைக்கும் இந்தக் குழுவே காரணம். அதுவும் ஒப்பந்த அடிப்படையிலான கொலையாகும்.

அண்மைக் காலமாக பொலிஸார் பல பாதாள உலகக் குழுவினரை கைது செய்துள்ளதுடன், ரி 56 ரகத் துப்பாக்கிகளையும் மீட்டு வருகிறார்கள்.

பெருந்தொகையான ரி 56 துப்பாக்கிகள் பாதாள உலகக் குழுவினரிடம் எப்படி பாவனைக்கு வந்தன என்பது பற்றியும் பொலிஸார் ஆராய்கின்றனர்.

யுத்தத்தின் முடிவில் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள், தொடர்புடைய புலி உறுப்பினர்களால் பரிமாற்றப்பட்டதா என்ற சந்தேகமும் பொலிஸாருக்கு உள்ளது.

கடந்த வருடம் நவம்பரில் வவுணதீவில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் இந்தக் குழுவே சம்பந்தப்பட்டதாக இருக்கலாமென்ற சந்தேகமும் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## வெகுவிரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புலம்பெயர் விடுதலைப் புலிகளின் நோக்கங்கள் நல்லாட்சி அரசினால் நிறைவேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியே இன்றும் இடம்பெறுகின்றது. அரசுக்கு எதிராகப் பேரணி நாடு தழுவிய ரீதியில் இடம்பெறவுள்ளது. அதன் முதற்கட்டம் கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது. வெகுவிரைவில் அரசியல் மாற்றம் ஏற்படும் – என்றார்.

காலைக்கதிர்
Kalaikathir



# விமானத்தை தாக்கும் துப்பாக்கியுடன் இராணுவ அதிகாரி பதுளையில் கைது!

## பல கோணங்களில் பொலிஸார் விசாரணை

கொழும்பு, மார்ச் 10

விமானங்களை தாக்கி அழிக்கப் பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள் மற்றும் அதற்குரிய 73 சன்னங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றிய பொலிஸார், இராணுவ உயர் அதிகாரி ஒருவரையும் கைதுசெய்தனர்.

பதுளை – ரிதிமாலியத்தை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து, குருவிதென்னை என்ற இடத்தில், இராணுவ உயர் அதிகாரியொருவரது வீட்டைச் சுற்றிவளைத்து – நேற்றுமுன்தினம் தேடுதல் வேட்டையில் இறங்கினர் பொலிஸார்.

தேடுதலின்போது, வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொதியொன்றைப் பரிசோதனை செய்தபோது துப்பாக்கிகளும், வெடிபொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருட்களின் உரிமையாளரென்று கருதப்படும், இராணுவ உயர் அதிகாரியையும் பொலிஸார் கைது செய்தனர்.

இவர் உடனடியாக மஹியங்கனை மாவட்ட நீதிபதி ஏ.ஏ. லக்சான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த இராணுவ உயர் அதிகாரி, மன்னார் பகுதியின் பெரியமடு இராணுவ முகாமில் சேவையாற்றும் வை.எம்.விஜய சூரிய என்ற 35 வயது நிரம்பியவராவார்.

இவர் விடுமுறையில் வீடு வந்து தங்கியிருந்தவரென்று, ஆரம்ப விசாரணையின் போது, தெரிய வந்துள்ளதாக ரிதிமாலியத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரொசான் எஸ். பந்துசேன தெரிவித்தார்.

விமானங்களை தாக்கி அழிக்கப் பயன்படுத்தப்படும் துப்பாக்கிகளின் உதிரிப் பாகங்கள், அத்துப்பாக்கிகளுக்குரிய சி.பி.சி. ரகத்திலான 50 தசம் 95 மில்லி மீற்றர் கொண்ட 24 சன்னங்களும், சி.பி.சி. ரகத்திலான 50 தசம் 81 மில்லி மீற்றர் கொண்ட 49 சன்னங்களுமாக 73 சன்னங்கள் அத்துடன் எப்.என்.எம். ரகத்திலான 5 தசம் 81 மில்லி மீற்றர் கொண்ட 273 ரவைகளும் மீட்கப்பட்டிருக்கின்றன எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தொடர்ந்தும் பொலிஸார் தீவிர புலனாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மணல் கடத்தல் முறியடிப்பு; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 10

அரியாலை – பூம்புகார் பகுதியில் மணல் கடத்தல் சம்பவம் ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளதுடன், கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில், உழவு இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் ஆகியவற்றைச் சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் மடக்கி பிடித்தனர். சாரதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவால் இந்த மணல் கடத்தல் நேற்று அதிகாலை 2 மணிக்கு முறியடிக்கப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ – 07)

## ஏதாவது குற்றம் புரிந்திருந்தால் கரன்னகொடவுக்கு தண்டனை

### அவசியம் என்கிறார் சரத் பொன்சேகா



கொழும்பு, மார்ச் 10

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஏதாவது தவறு செய்திருந்தால், அவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர்,

முன்னாள் கடற்படைத் தளபதி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் தண்டிக்கப்படவேண்டும்.

தமது மேல்மட்டத்தைத் திருப்திப்படுத்துவதற்காக, 12 இளைஞர்களைக் கடத்தி கொலை செய்வதற்கு உத்தரவிட்டிருந்தால் அவர் மீது சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாங்கள் போர் வீரர்களைத் தான் பாதுகாப்போம், குற்றவாளிகளை அல்ல – என்றார். (ஐ)




## 'மிருதங்க கலாவித்தகர்' பட்டம்



செல்வன் சு.அரவிந்தன் சுப்பிரமணிய சர்மா வட இலங்கை சங்கீத சபை ஆசிரியர் தரம் பூர்த்திசெய்து "மிருதங்க கலாவித்தகர்" பட்டத்தினை பெற்றுக்கொண்டுள்ளார். இவர் உலக புகழ் பெற்ற மிருதங்க வித்துவான் கலாபூஷணம் பிரம்மஸ்ரீ அ.கணேஷ் சர்மா தம்பத்தியினரின் பேரனும், பிரபல மிருதங்க கலைஞர் பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா தம்பதியினரின் மகனும் ஆவார். சு.அரவிந்தன் சுப்பிரமணி சர்மா கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். (இ)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.